வில்லியம் கூப்பரின்
கடிதங்கள்

5|N·51

திரட்டியவரும் தமிழாக்க ஆசிரியரும்:

கா. அப்பாத்துரை, எம்.ஏ. எல்.டி., விசாரத்.

MADRAS

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்
சென்னை

உரிமைப் பதிவு] 1949 [விலை அணா 14.

வில்லியம் கூப்பரின் கடிதங்கள்

திரட்டியவரும் தமிழாக்க ஆசிரியரும் :

கா. அப்பாத்துரை, எம்.ஏ. எல்.டி., விசாரத்.

டியூகோ பப்ளிஷிங் ஹவுஸ்

சென்னை

உரிமைப் பதிவு] 1949 [விலை அணா 14.

"கூப்பரிடம் உங்கட்கு விருப்பம் என்பது கேட்டு மகிழ்ச்சி. ஒருவருக்கு மில்ட்டன் பிடிக்கவில்லை என்று கூறினால் என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் கூப்பரின் 'தெய்வீக உரையாடலை' கண்டு களிவுறாத மனிதனை நான் மன்னிக்கவே முடியாது."

(கூப்பரின் கவிதை பற்றி லாம்ப், காலரிட்ஜுக்கு வரைந்த கடிதம்)

முதற் பதிப்பு—நவம்பர் 1949.

பொருளடக்கம்

எண்.		பக்கம்
1.	உலக வாழ்வும் வறுமையும்	1
2.	தன்னைப் பற்றி—	4
3.	ஹண்டிங்டன் வாழ்வு	7
4.	குடும்ப வாழ்வு	9
5.	கடனும் கடப்பாடும்	13
6.	ஹண்டிங்டன் நண்பர்கள்	16
7.	வேலையாளின் சிறு பிழை	18
8.	எழுத்தாளர் கிரே	18
9.	ஆங்கில நாட்டுப் பிரயாணிகள்	20
10.	பாட்டுக் கட்டுதல்—ஒரு நேரப்போக்கு	21
11.	ஆல்னிக்கு வந்த அரிமா	23
12.	மொழிபெயர்ப்பும் இலக்கியமும்	25
13.	கலையும் உலகியலும்	27
14.	மார்கேட் கடற்கரை	29
15.	சிறு செய்திகள்	32
16.	டாக்டர் ஜான்ஸனும் கவிஞன் மில்ட்டனும்....	34
17.	"இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்"	37
18.	நுண்ணறிவும் பொது அறிவும்	40
19.	ஒதுங்கி வாழ்பவர்களின் நேரப்போக்கு	43

எண்.		பக்கம்
20.	நுழையா விருநதும் அழையா விருந்தும்	45
21.	உரையாசிரியரும் 'திருத்துரை' யாசிரியரும்	46
22.	வழி விபத்து	48
23.	திரு. போப் கடிதங்கள்	52
24.	ஒரு விளக்கம்	54
25.	கடிதமெழுதுதலும் உரையாடலும்	56
26.	தப்பியோடிய வெண்முயல்	59
27.	காலத்தின் செயல்—ஆக்கமும் அழிவும் ...	61
28.	சிறுவர் கல்வி	63
29.	சட்ட வழக்கறிவிப்புக்களும் கவிதையும்	66
30.	கவிதை எழுதுவது ஏன்?	69
31.	கவிதை வெளியீடு	70
32.	பெண்டிர் பாராட்டும் மதிப்புரையும்	73
33.	முற்றெதுகை வாய்ந்த கடிதம்	76
34.	ஊர்ப்புற உண்டி ...	77
35.	காலத்தின் கோலம்	78

வில்லியம் கூப்பரின் கடிதங்கள்

1. உலக வாழ்வும் வறுமையும்

[திரு. கிளாட்வொர்தி ரௌலி அவர்கட்கு]

செப்டம்பர் 2, 1762.

அன்பு மிக்க ரௌலி,

உங்கள் கடிதம் நல்ல சமயத்திலேயே வந்து சேர்ந்தது; நாளை நான் பிரைட்டெல்ம்ஸ்டன் செல்கிறேன். குளிர் பருவத்தில் எல்லாருமாகத் திரும்பி வரும்வரை அங்கேதான் தங்கியிருப்பேன்.

இந்த உலகம் ஒரு தாறுமாறான உலகம் என்பது உண்மை. அது நம்மை நடத்தும் முறை நன்றாயில்லை. ஆனால் இதனால் என்ன கேடு? சில ஆண்டுகள் சென்றால் எல்லாம் ஒன்றாய்ப் போய்விடுகிறது! நமக்கும், நமக்குப் பத்துத் தலைமுறைக்கு முற்பட்ட மூதாதையருக்கும் கூட நாளடைவில் வேறுபாடில்லாமல் போய்விடும். இவ் வகையில் உங்களுக்கிருக்கும் சடைவு எனக்கும் இருக்க வழியுண்டு. உண்மையில் அவ் உணர்ச்சிக்கு நான் இடம் கொடுப்பதாயிருந்தால், உங்களை விட எனக்கே அதற்கான காரணம் மிகுதி. ஆனால் என் மடியில் ஒரு நூறுபொன்னுக்குக் குறையாமல் இருக்கும்வரை நான் இத்தகைய முசிவு களுக்கொன்றும் இடம் கொடுப்பதில்லை. நீங்களும் இடம்

கொடுக்காமலிருக்க வேண்டுமென்று உங்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்நிலை எத்தனை நாள் நீடிக்கும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நீடிக்கும்வரை அதன் வெற்றியை முழக்குங்கள்! பெரியோர்களெல்லாருமே இடர்களை எதிர்த்து நின்று பெருமையடைகிறார்கள். சிறியோர்களாகிய நாம் இடர்களைத் துச்சமாக எண்ணி நடந்தால் அது பெருமையல்லவா? உலகினிடமிருந்து எனக்கு இன்று கிடைத்துள்ள வாழ்க்கைத் தத்துவம் இதுவே. இது பழங்கால வேதாந்த வீரர்களை நினைவூட்டுவதாக வல்லவா இருக்கிறது என்று நீங்கள் கூறக்கூடும். ஆம்; ஆனால் அவ்வேதாந்திகள் போலிப் பசப்பு வேதாந்திகளானது பிற்காலத்திலேயே. முற்கால வேதாந்திகளின் போக்கு அறிவுக்கு ஒத்ததேயாகும்.

சிறுமையுடையவனாயிருப்பது இழிவு என்பதில் நான் காட்டும் உறுதியில் ஒரு பாதி பெரியவனாயிருப்பதில் காட்டுவதானால்கூட, நான் 'லிங்கன்ஸ் இன்' பகுதியில் ஒரு பெரிய மாடிவீட்டில் வாழ்ந்திருக்க முடியும். ஏனெனில் முயற்சி செய்தால் எவனும் பணக்காரனாக முடியாதென்பதில்லை. இதனை நான் ஆயிர வகைகளில் மெய்ப்பித்துக் காட்டமுடியும். தொழில் முயற்சியுடையவர்கள் என்பவர்களின் முயற்சியை ஆராய்ந்து பார்த்தால், அதில் பெரும் பகுதியும் வேறொன்றுமன்று: போரவாவும் போதுமென்ற மனமில்லாமையுமே என்பது தெரியவரும். ஆவலுடன் செய்யும் முயற்சி எதுவும் கட்டாயம் வெற்றி தரும். தனக்குத் தேவையற்ற பொருளில் பேராசை பிடித்து இரவில் விளக்கு வெளிச்சத்தில் உழைக்கும் இழிபண்பாளனை உலகம் மதிக்கிறது. ஆனால் தன் தேவைகளுக்காக மாடாயுழைக்கும் மனிதனை அது மதிப்பதில்லை. உழைக்க

மறுத்துத் தேவைகளை மறுத்து மன நிறைவுடன் வாழும் கண்ணியமிக்கவனையோ அது இழிவாகக் கருதுகிறது. இது மட்டுமோ? தம் இயற்கை உணர்ச்சி வசப்பட்டு அதன் வழியே நின்று வாழாத மனிதர் உலகில் எவர் உளர்? அப்படியிருக்க, உணர்ச்சிக்கு அடிமையாய் அவன் இதைச் செய்தான், இவன் இதைச் செய்தான் என்று எத்தனை பேர் ஒருவரை ஒருவர் குறை கூறக் காண்கிறோம். இயற்கையுணர்ச்சியென்பது, நுகத்தில் பூட்டிய காளைகள் போல் பிறர் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பவைகளா?

அறிவுடைய மக்களிடம் பெருஞ் செல்வம் வந்தால் அவர்கள் அதனைச் சரியாகப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இவர்களைக் காட்டிலும் நேர்மையுடைய அறிஞர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் அச்செல்வத்தின் தொந்தரவு இல்லாமலே கழிக்கும் திறமையுடையவர்களாய் இருக்கிறார்கள். அறிவுடையவர்களாகிய இவ்விரு திறத்தாருக்குமிடையே நேர்மையற்ற வழியில் பொருள் தேடும் அறிவிலிகளும், நேர்மையற்ற வழியில் அதைச் செலவிடும் அறிவிலிகளும் உள்ளனர். பொருள் தேடுவதில் மட்டும் நேர்மையுடையவர்கள் இருக்கமாட்டார்களா, அவர்களை இப்பாகுபாட்டில் எத்தரத்தில் சேர்ப்பீர்கள் என்று கேட்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று விசாரித்து வந்து சொன்னால், அதன்பின் அவர்களைப்பற்றி எண்ணிப் பார்க்கலாம்!

மொத்தத்தில், என் அரிய ரௌலி, குறிப்பிட்ட அளவு வரை வறுமை அவமதிக்கத்தகாத ஒருபண்புதான் என்பதை யாரும் ஒத்துக்கொள்ளவேண்டும். அதாவது நல்ல உணவு, தூய உடை, நல்ல கூட்டுறவு ஆகிய இவ்வளவுக்கும் வழி செய்யத்தக்க நிலையிலுள்ள வறுமையையே நான் குறிப்பிடு

கிறேன். இதற்குக் கீழ் நான் போக விரும்பமாட்டேன்; போனால் அதன்பின் மீண்டும் வாழ்வு பெற வேண்டும் என்று கவலைப்படவும் மாட்டேன்.

இக்கடிதம் உங்கட்குப் புதுமையுடையதாகத் தோன்றலாம். ஆம், இதை எப்படி எழுத நேர்ந்ததென்று எனக்கும் தெரியாது. எழுதியமட்டில் அதைத் தங்கட்கு அனுப்புகிறேன். அதனால் நன்மை உண்டாயின், அதனை மனமாற நீங்கள் பெறுக. அல்லாவிட்டால், அதைப்புறக் கணித்து விடுங்கள். எனக்குத் தனிச் செல்வநிலை எதுவுமில்லை. ஆகவே எவர் விருப்பு வெறுப்பினாலும் நான் பதறவேண்டியது மில்லை....வணக்கம். 'கார்' நலமே யிருக்கிறார் தங்களுக்குத் தம் நேசத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.

என்றும் தங்கள்
வில்லியம் கூப்பர்.

2. தன்னைப் பற்றி—

(பெருமாட்டி ஹேஸ்கெத் அவர்கட்கு)

டெம்பிள், ஆகஸ்ட் 9, 1763.

என் அன்புக்குரிய மைத்துனியீர்,

தங்கட்குக் கடிதம் எழுதுவதாக உறுதி கூறிவிட்டது காரணமாகவே என் சொல்லைக் காப்பாற்றுவதற்காக விரைந்து எழுதுகிறேன். தங்களுக்கு எழுதுவதென்றால் எப்போதுமே எனக்கு மகிழ்ச்சி. இப்போதோ பகலெல்லாம் பத்திரிகை படித்து அலுத்துப்போகிறது. இரவெல்

லாம் அவற்றைப் பற்றியே கனாக் கண்டு சலித்துப் போகிறது. ஆயினும இக்கடிதம் எழுதுவது கூட எனக்கு ஒரு பெரிய வேலையாகத் தான் தோன்றுகிறது. கடமை, தொழில் என்ற எத்தகைய கட்டுப்பாட்டையும் விரும்பாமல் விரும்பிய காரியத்தில் ஈடுபட்டே என் மூளை பழகிப் போய் விட்டது. இத்தகைய இயல்பு செல்வமிக்கவர் மூளைக்குத்தான் ஏற்றது. அதன் பயனை நான் எப்போதும் நுகர்கிறேன். இச்சோம்பல் பழக்கத்தை என்னால் எளிதில் விட முடியவில்லை. எனது இப்போதைய வேலையின் பயன்பற்றி எதுவும் உறுதி கூறுவதற்கில்லை. ஆனால் வெற்றி பெற்றால் என்னுடைய இவ் வேடுகள் ஊழூழி காலம், அல்லது இந்த ஆங்கில நாட்டு அரசிய லமைப்பு இருக்கும வரையிலாவது பத்திரமாக வைத்துக் காக்கப்படும் என்ற மன நிறைவுக்கு வழியுண்டு. நாட்டுப் பற்று இம்மியளவேனும் உள்ள எந்த நூலாசிரியர் பெரு மைக்கும் இது போதிய பரிசு ஆகும்!

என் அருமை மைத்துனியீர்! என் உள்ளத்தை உங்களுக்கு நான் திறந்து காட்டினால், நீங்கள் எவ்வளவு எதிர்பாராப் புதுமைகளைக் காணமுடியும்? அதில் நீங்கள் கண்டு வெறுக்க எதுவுமிராதென்றே நான் எண்ணு கிறேன். ஆயினும் நீங்கள் அவற்றைக் காண வியப்படையாமலிருக்க முடியாது. என் உணர்ச்சி நிலை மிகப் புதுமை வாய்ந்தது. நான் பார்த்துப் பழகியுள்ள மனதர் எவரிடமும் அத்தகைய நிலை கிடையாது. நான் முற்றிலும் 'வெகுளி' யென்று கூற முடியா விட்டாலும், எனக்குத் தெரிந்த எவரையும் விட நான் வெகுளித்தனம் உடையவனென்றே எண்ணுகிறேன். இதன் 'ஒருத்தம்பேர்' யாதெனில், நான் மற்ற உலகத்துக்குத்

தகுதியுடையவனே அல்லவோ, இந்த உலகத்துக்கு அவ்வள வாகத் தகுதியில்லாதவன் தான். இந் நிலை எனக்குத் தற்பெருமை ஊட்டுவதன்று. ஆனால் நான் எவருக்காக வும் இதனை மாற்றிக் கொள்ள முடியாது.

என் பயணத்தின் இலக்குப் பற்றிய தயக்கம் முடி வடைந்து விட்டது. என் உரிமை ஓய்வும் கிடைத்து விட்டது. இப்போது பேச்சு முழுவதும் 'மார்கேட்' பற்றித் தான். இனி இதன் விளைவு யாது? நீங்கள் இது பற்றி என்ன நினைக்கிறீர்களோ! நீங்கள் என்ன எதிர்பார்ப்பீர்கள் என் பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எப்போதுமே பிறர் இயல்பாய் எதிர்பார்க்கிறபடி நடக்காதவன். சில ஆண்டு கட்கு முன்வரை நான் வேறுமாதிரி ஆளாயிருந்திருக்க வழி யுண்டு. ஆனால் இப்போது என் குணம் முற்றிய நிலை அடைந்துவிட்டது. நான் இப்போது என்னைப்பற்றிய சிந்த னைக்குள்ளேயே நிறைவடைந்துவிட்டேன். நட்பு முறையில் உங்களிடம் மனந் திறந்து கூறுகிறேன், இந்நிலை விரும்பத் தக்கது கூட அன்று. ஆனால் இதன் மூலம் பிறருக்குத் தொல்லை எதுவும் கிடையாது.

மைத்துனியீர், இத்துடன் தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். தங்கள் உறவினனாகிய நான் தங்கள் முழு நேச வலையிலிருந்து எப்படித் தப்பித்துக்கொண்டுள்ளேன் என எனக்கே வியப்பாயிருக்கிறது. ஆயினும் தங் களுடனொன்றுபட்டுவிடாம விருந்தற்கும் நான் நன் றியே செலுத்தவேண்டும். ஏனெனில், முற்றிலும் ஒன்று பட்டால் இப்படித் தங்களுக்குக் கடிதம் எழுதும் இன்பம் அடைந்திருக்க முடியாதல்லவா? அதை நான் இழந்துவிட விரும்பியிருக்கவும் மாட்டேன். தாங்கள் எனக்கு மறு

கடிதம் எழுதக் கோருகிறேன். அப்போதுதான் தங்கள் முழு நேசத்தைக்கூட விட்டுக்கொடுத்த பெருந்தன்மைக்குப் போதிய பரிசை நான் பெறமுடியும்.

இன்றும், இனிமேலும் தங்கள்,

வி. கூ.

3. ஹண்டிங்டன் வாழ்வு

[திரு. ஜோஸெஃவ் ஹில் அவர்கட்கு]

ஹண்டிங்டன், ஜூன் 24, 1765.

அன்புமிக்க ஜோ,

நான் நோய்வாய்ப்பட்டபோது என் காரியங்களையெல்லாம் சரிவரக் கவனித்து வந்த தங்களுக்கு நான் செய்யும் கைம்மாறுவதெல்லாம் கடவுளருளால் நான் உளநலமும் உடல் நலமும் பெற்றுவிட்டேன் என்பதை அறிவிப்பதே. இதுவே தங்களுக்கு மகிழ்ச்சியூட்டும் என்பதை நான் அறிவேன். தாங்கள் மகிழ்ச்சி பெறும்படி நான் எதுவும் செய்யவும் காத்திருக்கிறேன்.

நான் 17-ம் தேதி ஸெண்ட் ஆல்பன்ஸைவிட்டுப் புறப்பட்டுக் கேம்பிரிட்ஜ் வந்து அங்கே என் உடன்பிறந்தாருடன் இரண்டொரு நாள் தங்கி 22-ம் தேதி இங்கே வந்து சேர்ந்தேன். இங்கே நான் தங்கியுள்ள இடம் நம் கோடைக்காலப் பயண இடைக் காட்சிகளை நினைவூட்டுவதாக இருக்கிறது. இதற்குமுன் நாம் தங்கியிருந்த இடங்கள் பலவற்றுக்கும் இது மோசமில்லை. இதன் இடவசதி சற்றுக் குறைவாயிருந்தாலும் தனியொரு மனிதனான எனக்கு இது

போதியதே. ஒரு ஆளுக்கு இதற்குமேல் வசதியும் கிடைப்பதரிதுதான். ஆனால் நான் முழுவதும் தனியாகவே இருக்கிறேன் என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில், ஸெண்ட் ஆல்பன்ஸிலிருந்து நான் என்னுடன் ஒரு வேலையாளைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். அவன் என்னிடம் எவ்வளவோ நாணயமும் உண்மையும் உள்ளவனாயிருக்கிறான்.

வேலையாள் என்றவுடன் துருக்கி நாட்டு ஒற்றர் ஒருவர் கூறியது என் நினைவுக்கு வருகிறது. அவர் வேலைக்காரரே வைத்துக்கொள்வதில்லை. உன் வீட்டிலேயே ஒரு பகைவனை ஏன் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறுவார். ஆனால் நானோ என்னுடன் ஒரு நண்பன் இருக்க வேண்டுவது அவசியம் என்பதையெண்ணியே ஒரு வேலையாளை அமர்த்திக்கொண்டேன். பொதுவாக வேலையாளை எவரும் நண்பராகக் கொள்வதில்லை. வேலையாட்களும் நண்பராக நடந்து கொள்வதில்லை. அவர்கள் நேசத்தைப் பாராட்டுபவரும் கிடையாது. அவர்களிடம் அத்தகுதி இருப்பதும் கிடையாது. ஆனால் என் அனுபவம் இதற்கு மாறானது. நன்மையிலும் தீமையிலும் என் வேலையாள் பேருதவியாயிருந்திருக்கிறான். அவனுக்கு ஈடும் எடுப்பும் கிடையாது.

இவ்வூருக்குப் பெருஞ் சிறப்புத் தருவது ஊஸ் ஆறு—அச்சிறப்பை எப்படி விளக்கிக் காட்டுவதென்று எனக்கு இன்னும் விளங்கவில்லை! இந்த ஆறு இங்கே தேம்ஸ் ஆறவ்வளவு அகலமாயிருக்கிறது. தேம்ஸின் வெள்ளிப் பரப்பகலம், அதன மலர்த் தடங்கரை என்றெல்லாம் கவிஞர்கள் வருணிப்பார்களே, இவை தேம்ஸுக்கு எவ்வளவு பொருந்துமோ அவ்வளவு இவ்வாற்றுக்கும் பொருந்து

மென்றே எண்ணுகிறேன். முழுப் பொருத்தத்தை எதிர் பார்த்தால் கவிஞர் கற்பனைக்கு உலகின் எந்த ஆறும் இணைதராதென்பது உங்களுக்கே தான் தெரியுமே! ஃபுளுவெல்லின் கூறுவதுண்டு. விரலுக்கு விரல் எப்படியோ தான் அப்படி ஆற்றுக்கு ஆறு, தேம்ஸுக்கு ஊஸ் என்று. விரல்களிலெல்லாம் நரம்புகள் இருப்பதுபோலவே இரு ஆறுகளிலும் அழகிய கயல் கெண்டைகள் உகள்கின்றன. குளிப்பதற்கும் அது நல்ல ஆறுதான்—இம்முறையிலேயே அதனுடன் முதல் தடவை அறிமுகம் செய்து கொண்டேன்.

நம் நண்பர்கள் அனைவருக்கும் என் வணக்கத்தை நினைவூட்டுவீர்களென்று வேண்டிக்கொள்கிறேன். இது உங்களுக்குச் சிரமமான வேலையாயிராதென்று அறிவேன். சிறப்பாகத் தங்கள் குடும்பத்தினரிடம் என்னை நினைவூட்டக் கோருகிறேன். மாறா அன்புரிமையுடன்

என்றும் தங்கள்,

வி. கூ.

4. குடும்ப வாழ்வு

(இதுவுமது]

ஹண்டிங்டன், ஜூலை 3, 1765.

அரிய ஜோ,

நீங்கள் என்ன கூறினாலும் சரி, இரண்டு பேரடங்கிய ஒரு குடும்பத்தை நடத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்லவென்றே எனக்குத் தோற்றுகிறது. தலைக்

கோபுரத்திலுள்ள சிங்கங்களைப் போல் *ஒரே இடத்தில் அடைப்பட்டுக்கிடந்து ஒரே வகைப்பட்ட ஆட்டுத்தலையையும் ஈரலையும் நாள்தோறும் உட்கொண்டு எங்ஙனம் வாழ்வது! சென்ற வாரத்தில் இறைச்சிக் கடைக்காரன் கடன் பட்டியல் நான்கு வெள்ளி பத்துக் காசாயிற்று**. இக் கடனையெண்ணி ஒரு இள ஆட்டுக்காலை வாங்கிக்கொண்டு வந்தேன். வழியில் அதிலும் ஒரு பாதியை வண்ணாரப்பெண் தட்டிக்கொண்டு போய்விட்டாள். பின் ஆட்டு ஈரல் ஒன்று வாங்க முயன்றேன். ஆனால் அது போதாது என்று கண்டேன்; எனவே மூன்று கல்லெடை† மாட்டிறைச்சி வாங்கி வந்து வேவல்‡ பண்ணுவித்தேன். இத் தடவை அது மட்டுக்கு மிஞ்சிய அளவாய்ப் போய்விட்டது. என் வீட்டுக்காரரை எங்களுடன் வந்து உண்ணக் கூப்பிட்டுங்கூட அது மூன்று நாளைக்குத் தேறிற்று.

உணவு சரி, அதைக் கரைத்து உள்ளே தள்ளச் சிறு குடி நீர் ஏதேனும் வேண்டுமே! அது வகையில் சிந்தித்துச் சிந்தித்து என் தலை சுக்கு நூறாய்ப் போய்விட்டது. ஒரு வெள்ளி கொடுத்து அச்சரக்கில் எவ்வளவு வாங்க வேண்டுமோ அவ்வளவும் வாங்கிவைத்தேன். அது ஒரு மாதத்துக்குப் போதும் என்றுதான் எண்ணினேன். ஆனால் அது அதற்குள் புளியாய்ப் புளித்துப்போய்விட்டது. இவற்றையெல்லாம் பட்டுப் பார்த்தபின்தான் குடும்பமாக வாழும் மற்றவர்கள் படும்பாடு எனக்குத் தெரியவருகிறது.

---

*லண்டனருகில் தேம்ஸ் பழம் பெரும் பாலத் தலைப்பிலுள்ள கோபுர மாளிகை பழங்கால மன்னர்கள் தம் அரசியல் பகைவர்களை அடைக்கும் சிறையாயிருந்துவந்துள்ளது. அதிலேயே புள்ள விலங்குக் காட்சிச் சாலையே இங்கே குறிக்கப்படுவது.

**4-sh. 6-d. †பௌண்டு. ‡ஒரு கறிவகை pie.

பலர் முகத்தில் பதிந்துள்ள அரசியல் வேதாந்தப் பொறிப்பைக் காண இனி எனக்கு வியப்பு ஏற்படாது. கவலையே ஏற்படும்.

இங்கு வந்தபின் ஒரே ஒருவர்தான் விருந்தினராக வந்தார். வேறு விருந்தினரை நான் விலக்கிவிட்டேன் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். ஒருவர்தான் எனக்குக் கிடைத்தார் என்பதே கருத்து. இங்ஙனம் வந்த விருந்தினர் எங்கள் துணிக்கடைக்காரர். அவர் நல்ல வாட்டசாட்டமும், உடல்கட்டும், நல்ல செல்வத் தளதளப்பும் உடையவராகவே காணப்படுகிறார். அவர்வசம் ஒரு குளிப்புக் கூடமிருக்கிறதாம். அதன் திறவுகோலொன்றைத் தந்து எனக்குக் குளிர்காலத்தில் குளிக்கும் வசதி தருவதாக அவர் வாக்களித்துள்ளார். அது மட்டுமோ? வாரம் மூன்றுதடவை எனக்கு வாசிக்க ஸெண்ட் ஜேமஸ் கிரானிக்கிள் தரவும், ஹச்சின்புருக் மாளிகையை எனக்குக் காட்டவும், வேறு எவ்வகையான உதவிகள் புரியவும் அவர் இணங்கியுள்ளார்.

இவ்விடத்தில் சீட்டாடுமரங்கு, நடனமேடை, குதிரைப் பந்தயக் கூடம், பந்தாடும் களம், விளையாட்டுப் புல்வெளி ஆகிய யாவும் உள்ளன. எனவே எனக்கு உண்மையிலேயே குறை எதுவுமில்லை என்பதை நீங்கள் நம்பலாம். ஆனல் என்மட்டில் அவை அருகிலிருந்தாலும் ஒன்றுதான், மூவாயிரம் கல்லுக்கு அப்பாலிருந்தாலும் ஒன்றுதான். ஆயினும் அருகிலிருப்பதிலும் பயனில்லாமலில்லை. அவற்றி லீடுபட்டிருப்பவரைவிடப் பார்வையாளருக்கே இன்பமிகுதி. வாழ்க்கை யின்பத்தைப் பற்றிய மட்டிலும் பார்ப்பதும் ஈடுபட்டிருப்பதும் பலன் ஒன்று. ஒரு வேளை நீங்கள் கேட்கக்

கூடும்: நான்தான் அந்த இடத்துக்குப் போவதில்லையே, பார்வையாளன் என்று நான் எப்படி என்னைக் கூறிக் கொள்ளமுடியும் என்று. ஆம், அதுவும் சரிதான். இக்கடிதத்தின் மறு பதிப்பில் இத்தவற்றைத் திருத்தி விடுகிறேன்!

குடி வீட்டிலிருந்து குடிக்கூலி தராமல் காலந்தள்ளும் ஒருவனிடம் நீங்கள் நடந்துகொள்வதும் நன்றாயில்லை. உங்கள் தாயார், உங்கள் அம்மாள் ஆகியோரின் கோழி சேவல் குழாங்களும், தட்டுமுட்டுக்களும் அங்கே எங்கும் கிடக்கின்றன. ஒருவருடைய வீட்டில் நீங்களும் வாடகையில்லாமல் தங்குதடையின்றி இப்படி உங்கள் ஆட்கள் புகுந்து நடமாடுவதைப்பார்க்க எனக்கு மனம்வந்தால் நான் படுசீற்றம் அடையக்கூடும். ஆனால் உங்கள் கையில் சிக்கியபின் அக் குடிக்கூலிக்காரன் படும் பாட்டை எண்ணிப் பார்ப்பதே எனக்கு வேடிக்கையாகத்தானிருக்கிறது. அப்பாவி மனிதன்! உங்கள் இரக்கச் சிந்தைக்கே அவனை விட்டுவிட எண்ணுகிறேன்.

என் அரிய ஜோ! நான் நீண்ட கடிதம் எழுதும்படி நீங்கள் கோரியுள்ளீர்கள். அதற்கு வேண்டிய கருத்துக்களும் எனக்கு இல்லை. எழுதுவதற்கு வேண்டும் முயற்சியூக்கமும் எனக்குக் கிடையாது. நீங்கள் வாசித்து வாசித்துச் சோர்வுற்ற சமயமாகப் பார்த்து என் கடிதத்தை வாசியுங்கள். அது நீளமானது என்று தோற்றும்படி செய்ய இதுதான் வழி. நான் எழுதுவதில் எவ்வளவு சடைவு கொள்வேனோ, அவ்வளவு அதனை வாசிப்பதிலும் நீங்கள் அப்போது கொள்வது உறுதி. குறுகிய கடிதத்தை இங்ஙனம் நீடித்த கடிதமாக்கும் செயல்வித்தை இருக்கும் போது நீடித்த கடிதம் எழுதச் சிரமப்படுவானேன்?

என் நண்பர் கோல்மனுக்கு இப்போது சொம்முச் சொத்துக் கிடைத்திருக்கிறது. அவருக்கு இன்னும் நற் பேறு கிடைக்கவேண்டும்; அதாவது கிடைத்த செல் வத்தை அவர் நன்கு பயன்படுத்தும் வகை காணவேண்டும் என்று நான் விரும்புகிறேன். லாயிட், பென்ஸ்லி ஆகிய வர்களின் துன்ப நாடகக் காட்சிகள் மிகவும் நேர்த்தியா யிருக்கின்றன. அவற்றின் உணர்ச்சியாழம் மனதை உருக்கு கிறது. இறந்தவர் இறப்புப் பற்றிய இக் காட்சிகள் இறவா திருக்கும் மக்கள் வாழ்க்கைக்குப் பயன் படாவிட்டால், அதற்காக இறந்தவர்களை எப்படிக் குறை சொல்வது?

நான் பென்ஸ்லிக்குக் கொடுக்க வேண்டிய கடன் ஏழு பொன்னு, ஒன்பது பொன்னு என்று தெரியவில்லை. அவர் தம்பியை நீங்கள் கண்டால் என்பேரால் அவரிடம் அக்கடனைத் தீர்த்துவிட்டால் நன்றாயிருக்கும்—ஆனால் அது வகையில் அவசரமில்லை. உங்கள் வசதிபோல் செய்யுங்கள்.

உங்கட்கும், அவர்கட்கும் கடமைப்பட்ட,

தங்கள்,

வி. சூ.

5. கடனும் கடப்பாடும்

]இதுவுமது]

ஆகஸ்ட் 14, 1765.

அருமை ஜோ,

நீங்கள் என்னை வந்து காண எண்ணியுள்ளீர் களென்று ஹெஸ்கெத் பெருமாட்டியும் என் உடன் பிறந்தாரும் என்னிடம் கூறியிருந்தார்கள். ஆனால்

அவர்கள் ஏமாற்றமே அடைந்தார்கள். அவர்கள் நீங்கள் வர எண்ணியதாகமட்டும் கூறினாலும் கேடில்லை. நீங்கள் வார்விக்ஷயருக்குப் புறப்பட்டு விட்டதாகவே சொன்னார்கள். அதனால் இவ்விரண்டு வாரமும் கணந்தோறும் இடைவிடாமல் இப்போது வந்து விடுவீர்கள், அடுத்த கணம் வந்துவிடுவீர்கள் என்று எதிர்பார்த்துக்கொண்டேயிருந்து ஏமாற வேண்டியதாயிற்று. இவ்விரண்டு அறிவுத் திறமுடைய மக்களும் (ஆம், இருவரும் அறிவற்றவர்கள் என்று கூறமுடியாது) ஃபிரஞ்சு ஃபிளாண்டர்ஸுக்குப்* புறப்பட்டதை எப்படி வார்விக்ஷருயக்குப் புறப்பட்டதாக எண்ணி ஏமாந்தனரோ, என் சிந்தனையாற்றலுக்கு எட்டவில்லை. இன்னும் தாங்கள் வரப்பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயே ஆறுதலடைந்திருக்கிறேன். இந்த நம்பிக்கையையேனும் என் நல்லெண்ணச் சேமப் பெட்டகத்தில் எப்போதும் கெடாது வைத்திருக்கலாமல்லவா? அதற்கிடையில் நம் தேசப்பாடல் ஒன்று கூறுகிறபடி இந்த பிரிட்டிஷ் கடற்கரை உங்களை என்றும் வரவேற்கக் காத்திருக்கிறது. உங்கள் பயணத்தின் மணிச் சுருக்கமான விவரம் காண நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் அதில் தெளிவாகப் புலப்படவில்லை. உங்களிடம் கொண்டு போகக்கூடாத வெளிநாட்டுச் சரக்குகள் இருப்பாழத்துக்கு எப்போதும் இருக்குமே! அவற்றுடன் சுங்க அதிகாரிகளிடமிருந்து எப்படி தப்பிக்கொண்டு வருகிறீர்கள் என்று எழுதவில்லை. உங்கள் கால் சோடுகளைத் துருவிப்பார்த்தால் கூடச் சட்ட மீறிய சரக்குகள் இருக்குமல்லவா?

---

* பெல்ஜியம்.

எனது அரிய ஜோ, நான் முழுந்தாளளவு கடன் சேற்றில் உழலுகிறேனென்பது உங்களுக்குத் தெரியும். ஸெய்ட் ஆல்பன்ஸிலுள்ள என் 'சிறு' மருத்துவருக்கு நான் கடனாளியாயிருப்பது உங்களுக்குப் புதிய செய்தியல்ல. என்னால் முடிபுடான அளவுக்கு (le plutot qu'il sera possible—எனது ஃபிரஞ்சில் பிழையிருக்குமானால் திருத்திக்கொள்ளவும்) அதைத்தீர்ப்பதே அழகாயிருக்கும் அல்லவா? உங்கள் கைகள் நிறையத் தற்போது காசு இருப்பதாக என் உடன் பிறந்தார் கூறுகிறார். அருள் கூர்ந்து என் கணக்கில் அவருக்கு உடனடியாக நாற்பது பொன் அனுப்பிவிடும்படி நான் கோரலாமா? இதைச் செய்யக் கூடுமானால் நான் தங்கட்கு மிகவும் கடமைப்பட்டவன் ஆவேன். அத்துடன் என் உடன்பிறந்தார் எங்கும் பறைசாற்றுகிறபடி விரைவில் உங்களுக்கு வரவேண்டிய நூறு பொன்னும் வரக்கூடுமானால், இவ்வேழையிடமிருந்து வேறு தகவலெதிர்பாராமலேயே மீதிக்கடனையும் தீர்த்துவிடும்படி கோருகிறேன்.

நான் இப்போது ஒரு குதிரை வலவனாகவும் அத்துறையிலும் வல்லவனாகவும் ஆகிவிட்டேன். இதன் பயனாக இப்போது 'செங்குருதித்தார் வீரன்' (Knight of the Bloody Spur) என்று பட்டத்தை இறுமாப்புடன் வகித்துக்கொள்ள முடியும். இதற்காக நான் செலவு செய்தது மிகுதியே. ஆனால் இறுதியில் அத்திறத்துக்குரியவனாய் விட்டேன்.

என்றும் தங்கள்

வி. கூ.

6. ஹண்டிங்டன் நண்பர்கள்

(ஹெஸ்கெத் பெருமாட்டி அவர்கட்கு)

ஹண்டிங்டன், செப்டம்பர் 14, 1765.

அன்புமிக்க என் மைத்துனியீர்,

இங்கே நான் தங்கியுள்ள காலம் நீடிக்குந்தோறும் இவ்விடத்தின் மீதும் அதிலுள்ள மக்களின் மீதும் எனக்குள்ள விருப்பமும் அதிகரிக்கவே செய்கிறது. இங்கே ஐந்து குடும்பங்களுக்குக் குறையாமல் எனக்கு நன்கு பழகிப் போய்விட்டது. கடைசியாகப் பழக்கமானவர்கள் அன்வின் குடும்பத்தினர். அதில் தந்தையும் தாயும் ஒரு புதல்வரும் புதல்வியாரும் உள்ளனர். அவர்கள் அனைவருமே மிகவும் ஆசாபாசம் உடையவர்கள். மகனுக்கு இருபத்தொரு வயது இருக்கும். அவர் யாரிடமும் மனந்திறந்து பழகுபவர். அன்பு மிக்கவர். நம் வயதில் பலர் சூதுவாதுகளை ஆன்ற அறிவுடைமை என்ற தோற்றத்துக்குள் புதைத்து நடப்பர். தம்மைத் தவிர வேறு யாரையும் தொலைவில் வைத்து அயலாராகப் பாவிப்பர். அவர் இவ்வயதையோ அதன் பண்பையோ இன்னும் எட்டிப்பிடிக்கவில்லை. அவரைக் கண்டவரெல்லாம் நண்பராகி விடுகின்றனர். அவர் மனத்திலும் ஒளித்துவைக்கவேண்டிய கபட எண்ணம் எதுவும் இல்லாததால் ஒரு நாள் பழகியவருடனும் நன்கு மனம் திறந்து பேசி உறவாடுகிறார். தந்தை சமயப் பணியாளராயிருக்கிறார். பிள்ளையும் அதற்கே பயிற்சி பெற்று வருகிறார். இயற்கையிலேயே அவர் சமயப்பற்றும் சமய நூல் நம்பிக்கையுமுடைவராயிருப்பதால் இதற்காக அவர் வலிந்து ஒன்றும் பயிலவேண்டியதில்லை. அது இயற்கையாகவே, அவரிடம் படிந்து விடுகிறது.

நான் அண்மையில் பழகிய மற்றொருவர் திரு. நிக்கால்ஸன் என்ற ஒரு வடநாட்டுச் சமய அறிஞர். அவர் ஏழையாயினும் மிக நல்லவர். மன நிறைவுடையவர். அவர் ஆண்டு முழுவதும் நாளைக்கு இரண்டு தடவை இங்கே தொழுகை நடத்தி வருகிறார். இதற்காகவே தன் வீட்டிலிருந்து கோயிலுக்கும், கோயிலிலிருந்து வீட்டுக்கும் உள்ள பதினாறு கல் தொலையையும் கடந்து அவர் நான்கு தடவை நடந்து செல்கிறார். நேற்றிரவு அவருடன் உண்டேன். ரொட்டியும் வெண்ணெயும் அவற்றுடன், அவர் தம் கையால் வடித்துக் கையால் செய்யப்பட்ட சாடியில் வைத்திருந்த பானமும் அருந்தினேன்.

என் புது நண்பர்களுள் இன்னொருவர் திரு.......... அவர்கள். இவர் ஊனுணவே தொடுவதில்லை. குடிவகையைக் கூட அப்படியே. உண்ணும்போது தண்ணீர்மட்டுமே அவர் குடிக்கிறார். ஓரளவு சமயப்பற்றுக் காரணமாகவும் ஓரளவு உடல் நலிவு காரணமாகவுமே அவர் இவற்றை விலக்கினார் என்று தோன்றுகிறது. ஒவ்வொரு நாட்காலையிலும் ஆறு மணிக்கு அவரை இவ்வூர் ஊருணியண்டை காணலாம். பிரிஸ்டலில் உள்ள ஊற்றைப் போலவே இதுவும் பேர்பெற்றதாகும். அவரைப் போலவே நானும் காலை யெழுபவன், காலையுலாவுபவன். ஆதலால் இருவரும் எளிதில் பழகுகிறோம். அவர் தம் சமயப்பற்றுக் கீடான இன்னொரு பண்பும் உடையவர். கால ஒழுங்கில் அவரை ஒரு கடிகாரம் என்னலாம்.

திரு..........என்னைப் பார்க்க வந்தார். அவர் நல்ல புத்தி கூர்மையுடையவர். நன்கு வாசித்தவர். கண்ணியமானவர். இங்கிலாந்து முழுவதிலும் நீ எங்கு வேண்டுமானாலும் குடியிருக்கலாம் என்று எனக்குக் கூறப்பட்டால்கூட

நான் இந்த இடத்தைவிட வேறு இடம் தெரிந்தெடுக்கமாட்டேன். வேறு எந்த இடமும் எனக்கு இவ்வளவு பிடித்திருக்கவும் செய்யாது. இத்துடன்

தங்கள்
வி. சு.

7. வேலையாளின் சிறு பிழை

(திரு. ஜோஸஃவ் ஹில் அவர்கட்கு)

ஜனவரி 1, 1771.

அருமை ஜோஸஃவ்,

உங்கட்கு மான்கறிச் சிப்பங்கள் இரண்டு அனுப்பப்பட்டுள்ளன. ஒன்று இடுப்புப் பகுதி. ஒன்று தோட் பகுதி. முதலாவது உங்களுக்கென்றே அனுப்பப்பட்டது, இரண்டாவது ஒரு தவறு மூலம் உங்களுக்கு வருகிறது. சிப்பக்கூடையை வண்டியிலேற்றியனுப்பிய சில மணி நேரமான பின்பே இடுப்புக் கறிக்குப் பதில் தோட் கறி வைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவந்தது. சென்றதைத் திரும்பவும் பெறுவதற்கு எல்லா முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனல் வண்டியிலேற்றிய சிப்ப முழுவதும் எப்படியும் இறக்கப்பட முடியாது என்று கண்டோம். இறக்காமல் அதைப் பெறவும் வழியில்லை. எனவே வேலையாள் பிழை உங்களுக்கு ஒரு நன்மையாயிருக்கட்டும் என்று விட்டு விட்டோம். ஆகவே அவன் சிறு பிழையால் இங்கே ஆல்னியில் உண்ணப்பட வேண்டிய உணவு அங்கே உங்கட்குப் பயன்பட விருக்கிறது.

என்றும், அரிய நண்பரீர், தங்கள்
வி. சு.

8. எழுத்தாளர் கிரே

[இதுவுமது]

ஏப்ரல், தேதி 20 போலிருக்கிறது, 1777.

என் அரிய நண்ப,

தாங்கள் அனுப்பி வைத்துள்ள உண்டி வகைகளுக்கும் 'காப்டன் பிரைட்டனின் பயண விவரங்க'ளுக்கும் என் நன்றி. காப்டன் பிரைட்டன் தம் பயணங்களைச் சுவைபட எழுதியிருக்கிறார். அவர் பயணங்களை நமக்கு எடுத்துக் கூறி அவற்றின் மூலம் அவர் நம் தோழமையை அடைய முடிகிறது. ஆயினும் அவருக்கு அப்பயணங்களில் நல்ல துணை இல்லாமற்போனது வருந்தத்தக்க செய்தியே. கிரேயின் நூல்களை நான் இப்போது வாசித்து வருகிறேன். ஷேக்ஸ்பியருக்குப் பிறபட்டு அவர்தான் ஆங்கில மொழியின் சிறந்த வீறு மிக்க கவிஞர் என்று எண்ணுகிறேன். நான் முன்பு வேறுவகையான கருத்துக்கொண்டிருந்தேன் என்பது உங்களுக்கு நினைவிருக்கலாம். அப்போதெல்லாம் என் மனம் அவர்மீது தப்பெண்ணம் கொண்டிருந்தது. ஏனெனில், அவர் கேட்டனில் பயின்றவர். நம் 'வியாழக்கிழமைக் கழக'த்தைச் சேர்ந்தவர் அல்ல. எங்கள் மதிப்பில் இது அவரை மிகவும் தாழ்த்திவிட்டது. கடிதங்களிலும் நான் இதற்கு முன் ஸ்விஃப்ட் எழுதியவையே நேர்த்திமிக்கவை என்று எண்ணியிருந்தேன். இப்போது கிரேதான் அவரினும் சிறந்த கடித எழுத்தாளர் என்று எண்ணுகிறேன். அவர் நகைத்திறம் அல்லது உவகையில் புண்படுத்தும் பண்போ பகையுணர்ச்சியோ ஒரு சிறிதும் கிடையாது. ஆயினும் சொல்லாற்றலில் அது ஸ்விஃப்டை விடச் சற்றும் குறைந்துவிடவும் இல்லை.

தங்கள் அன்புக்குரிய

வி. கூப்பர்.

9. ஆங்கில நாட்டுப் பிரயாணிகள்

[இதுவுமது]

ஜூலை 13, 1777.

என் அரிய நண்ப,

தென் கடற் பயண விவரங்கள் பற்றி நீங்கள் இனியும் தொந்தரவு எடுத்துக்கொள்ள வேண்டாம். டார்ட்மத் பெருமகனார் ஒரு மாதமாக இங்கே வந்திருக்கிறார். அவர் அன்புடன் என்னிடம் இரு முறை வந்து உண்டார். கூக், ஃவார்ஸ்டர் ஆகிய இருவர் பயண நூல்களையும் அவர் எனக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். இவற்றை வாசித்தபின் நம் தேசீய வளத்திற்குக் காச்சல் கிழங்கும், நேந்திரக் காய்களும் சிறிதும் பயன்படாதது எவ்வளவு நல்லதாயிற்று என்பது தெரிய வருகிறது. ஏனெனில், நம் நன்மை அந்நாட்டு மக்கள் வாழ்வுக்கு வைத்த நெருப்பாகப் போயிருக்கும். ஏதோ ஒன்றிரண்டு தடவை சுவைபார்த்தபின் நாம் அவற்றை அவர்களுக்கே விட்டு வைத்து விடுவோம்! நமக்குத் தேவையில்லாதவற்றை வைத்துக்கொண்டாவது அவர்கள் வாழ்ந்து போகட்டும்!

உங்களுக்கு ஓய்வு கிடைத்தால் பேக்கரின் நுட்ப நோக்காடி (Microscope), வின்ஸென்ட் பூர்ணின் இலத்தீனக் கவிதைகளின் அணிமைப் பதிப்பு ஆகியவற்றை வாங்கியனுப்பி உதவும்படி கோருகிறேன். இரண்டில் எதுவாயினும் சரி, அல்லது இரண்டுமாயினும் சரி எளிதாகக் கிடைப்பதை அனுப்பித் தருக.

தங்கள் அன்பு மிக்க,
வி. கூப்பர்.

10. பாட்டுக் கட்டுதல் - ஒரு நேரப்போக்கு

[தூய திரு. வில்லியம் அன்வின் அவர்கட்கு]

என் அருமை வில்லியம்,

என் கடிதத் தலைப்பில் முதலிலேயே மீன்தான் மிதந்து வருகிறது—மிதப்பது குளத்திலல்ல, என் மனத்தில்தான். தாங்கள் அனுப்பித் தந்த மீனுக்கும் நான் நன்றி செலுத்த வேண்டும். அதைக் கட்டணச் செலவில்லாமலே அனுப்பித் தந்ததையும் மறப்பதற்கில்லை. அந்நினைவே மனத்தில் முனைத்து நின்றதனால் அச் செய்தியைப் பிற்சேர்க்கையாக இறுதியில் வரைவதைவிட முதலிலேயே குறிக்க எண்ணினேன்.......

நான் பாட்டே எழுதுவதில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள். உண்மையில் 14 வயதாயிருக்கும்போது டிபுல்லஸின் பரிபாடலை (elegy)மொழி பெயர்க்கத் தொடங்கியது முதல் பாட்டெழுதிக் கொண்டே தான் இருக்கிறேன். இதனால் நான் கவிஞன் என்ற பெயருக்கே உரியவன் என்று கூறமுடியாது. எலிப்பொறி ஒன்று செய்வதனால் ஒருவன் சிற்பியாய் விடமுடியுமா? ஆனால் எனது இச்சிறு செயல் எனக்கு நல்ல நேரப் போக்காகவே இருந்தது. நாமும் ஒரு கவிஞனாயிருந்தோமில்லையே என்று நான் அடிக்கடி எண்ணுவேன்., எனது பாட்டுக்கள் எல்லாம் சிறு குழந்தையின் கிலுகிலுப்பை மாதிரிதான்—குழந்தைக்கு அது மகிழ்ச்சியும் மற்றவர்களுக்குக் காதடைக்கும் தொந்தரவும் கொடுப்பது போலவே இதன் தன்மையும். ஆயினும் எனக்கு அடிக்கடி ஏற்படும் மனமுசிவுகளைப் போக்க அது பேருதவியாய் இருந்துள்ளது. பண்பட்ட நன்மக்கள்

வேலையற்றபோது யாழைப் பயன்படுத்துவதுபோல், நானும் இதைப் பயன்படுத்துகிறேன்.

எதுகை மோனையில் பாசம்வைப்பவர் எல்லோருக்கும் உள்ள பண்பு என்னிடமும் உண்டு. எழுதும்போது என் சொல்லிலே எனக்கிருக்கும் இலயிப்பு மிகுதியே. ஆனால் அது முடிந்த பின் நான் அதை எட்டிப்பார்க்கவும் எண்ணுவதில்லை. அதை நான் பெரும்பாலும் உடனே எறிந்துவிடுவது வழக்கம். சிலபோது பத்து ஆண்டு கழித்து அதை எடுத்துப் பார்ப்பேன். அப்போது அது முதல் தடவை வாசிப்பது போலவே மகிழ்ச்சியூட்டுவதுண்டு.

தங்களைப் பற்றித் தாங்களே பேசி அதன் மூலம் பிறருக்கு இன்பமூட்டுபவர் மிக மிகச் சிலரே. ஆகவே இதற்குள் உங்களுக்குச் சலிப்பு ஏற்படவில்லை யென்றால் அது என் திறத்துக்கு நீங்கள் தரும் ஒரு பெரிய நற்சான்று ஆகிவிடும்.

தம் தோழியர் ஊகங்களைக்கேட்டுச் செல்வி....மிகவும் களிப்பெய்தியிருப்பார் என்றே எண்ணுகிறேன். ஆல்னியில் அவர் அடைந்த நல்லின்பத்திற்கான மறைதிறவு எல்லாருக்கும் எளிதாகத் தெரிந்ததே—தெரியாதது போல அவர்கள் காட்டிக்கொள்கிறார்கள். இன்பமாயிருக்கவேண்டும், பிறரை இன்புறுத்தவேண்டும் என்ற இயற்கையெண்ணத்துடனே தான் அவர் வந்தார். அதனால் இன்பம் பெற்றார். இங்ஙனம் நடப்பவர் எவருமே இன்பமெய்தாமலிரார்.

இங்ஙனம், தங்கள்

வி. கூ.

11. ஆல்னிக்கு வந்த அரிமா

[இதுவுமது]

ஜூலை 18, 1778.

என் அரிய நண்ப,

எடுத்தவுடனே உங்களுக்குச் செய்திகளை நேரடியாகச் சொல்லப் போகிறேன்—அது கடித மெழுதும் முறைக்கு மாறானதென்றால் கேடில்லை. இன்றைய 'கற்பனை எழுத்தாளர்' நடை அதுதானே!

திரு. மார்லி—அதுதான் நமது மளிகைக்கடைக்காரர்—கவனக் குறைவு, காரிய சாதனைக் குறைவு ஆகிய குற்றங்களுக்குள்ளாயிருக்கிறார். உங்கள் தாயாருக்கு அவரைக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவரை இனி நீக்கிவிட எண்ணி விட்டார்கள். ஆகவே எங்கள் வாடிக்கையை வேறிடத்துக்கு மாற்றும்படி உங்களுக்கு எழுதி திரு. ராலின்ஸன் முகவரியை அனுப்பும்படி அவர்கள் கோரியுள்ளார்கள். அதோடு இங்கே இப்போது கெண்டைமீன் கிடைக்கும் பருவமல்ல என்றும், அவ்வகையில் ஆல்னிக்கு வேண்டுகோள் எதுவும் விடுக்கக்கூடாதென்றும் அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

தங்கள் அரசியல் அறிவுத் திறத்துக்கு நாங்கள் பெரிதும் கடப்பாடுடையோம். அதற்கு அதே வகைக் கைம்மாறு செய்யும் ஆற்றல் எங்களிடம் இல்லை. ஆயினும் செய்தித்தாள்களில் எங்களுக்குக் கிட்டாத செய்திகள் எது இருந்தாலும் தொடர்ந்து அறிவித்து வரும்படி கோருகிறோம். இங்கு ஆல்னியிலும் என்றும் நடக்கும் பொதுச் செய்தி

கள் தவிர ஏதேனும் தனி நிகழ்ச்சிகள் நடைபெற்றால் கட்டாயம் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அண்மையில் இத்தகைய செய்திகள் எதுவும் நிகழவில்லை. வேண்டு மானால் ஒன்றே ஒன்று கூறலாம். இங்கே விழாக் காட்சிக்கு எழுபது ஆண்டு சென்றதென்று கூறப்படும் ஒரு சிங்கம் கொண்டுவரப்பட்டது. அது ஒரு நாட்டுப் பூனை போலச் சாந்தமாக நடந்துகொண்டது. நானும் உங்கள் அன்னை யாரும் அதைப் பார்க்கச் சென்றோம். நாங்கள் காண, அது காட்சித் தலைவருக்குக் கைகொடுத்தது. மற்றும் சிலர் பார்க் கும் போது அது அவர் தலையைத் தன் வாய்க்குள் வைத் துக் கௌவிப் பின் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டதாம்! இதை நாங்கள் பார்க்க விரும்பாமலே திரும்பிவிட்டோம். திரும்பவும் அங்கே செல்லும்போது இந்த ஆபத்தான வித் தையை இனிச் செய்துகாட்டவேண்டாம் என்று கேட்டுக் கொண்டோம். பலிகொடுப்பதற்கு வேறொரு தலை தனியாக இருந்தாலல்லாமல் அறிவுடைய எவரும் இப்படிச் சிங்கத் தின் வாய்க்குள் தலையைக் கொண்டு கொடுக்கமாட்டார் கள். இவ்வரிமா உண்மையில் பார்க்க மிகக் கம்பீரமானது. நமது தலைக் கோபுரத்தில் நாம் பார்த்த சிங்கத்தைப் பார்க் கினும் இது நல்ல அரசுநிலைக்குரிய முகவெட்டு உடையது.

தங்கள் முந்திய கடிதத்துக்கு நன்றியுடன்,

தங்கள்

வி. கூப்பர்.

12. மொழிபெயர்ப்பும் இலக்கியமும்

[இதுவும் அது]

மே 26, 1779.

என் அரிய நண்ப,

நம் கண்ணாடிக் கடைக்காரரை ஏய்க்க நான் வகுத்துள்ள திட்ட வகையில் உங்கள் உதவியைச் சற்றுக் கோருகிறேன். அரசியலார் கண்ணாடி மீது ஒரு வரி போட்டிருக்கிறார்கள்; ஆனால் கண்ணாடிக் கடைக்காரர் அதனை மும்மடங்காக்கியுள்ளார். எனக்கு ஒரு பெரிய சட்டத்திற்கு வேண்டிய அளவு கண்ணாடி தேவை. அதற்காக நேர்மைக்குப் பன்மடங்கு மேற்பட்ட விலை கொடுக்கவும் நான் முனையவில்லை. ஆகவே கண்ணாடித் தொழிலாளர் எவரிடமிருந்தாவது தோட்டங்களின் மூடு தொட்டி*களுக்கான சியூகாஸில் கண்ணாடி என்ன விலைக்குக் கிடைக்கும் என்று அறிந்து தெரிவிக்கக் கோருகிறேன். இத்தகவலுடன் தொழில் நிலை முகவரியும் அனுப்பினால், தங்களுக்கு மேலும் தொந்தரவில்லாமலே இக்காரியத்தை நானே முடித்துக்கொள்வேன்.

'பிரயர்' இயற்றிய "கவிஞர்கள்" வகையில் நான் தங்கட்குப் பெரிதும் கடப்பாடு உடையேன். அதனை இலத்தீனில் நான் மொழி பெயர்த்தபோது அதன் மூலம் உங்கள் பணப்பையிலிருந்து இவ்வளவு பணம் புத்தகக் கடைக்

---

* Hot-Beds. தாய் நாட்டிலிருந்து மாறுபட்ட தட்ப வெப்ப நிலையுடைய நாட்டுச் செடிகளை அந்தட்ப வெப்பநிலையைப் பாதுகாத்துக்கொள்வதற்காகத் தோட்டங்களில் மூழுத் தொட்டிகள் அமைக்கப்பட்டு அவற்றில் அவை வளர்க்கப் பெறுகின்றன. இங்கிலாந்தில் தென்னை கூட இங்ஙனம் வளர்க்கப்படுகிறதாம்!

காரர் பெட்டிக்குப்போகும் என்று எண்ணியவனல்ல.* ஆயினும் ஆங்கில இலக்கிய முன்மாதிரிகளை வாங்கு வது என்ற விருப்பம் ஏற்பட்டது காண நீங்கள் கொடுத்த பணத்திற்காகக்கூட நான் வருந்தவில்லை. அது பயனுடைய செயலேயாகும். நான் பிரயர் கவிதைகளில் சில ஏடுகளை அங்கங்கேதான் பார்வையிட்டிருக்கிறேன். இன்னும் முற்றி லும் முடிக்கவுமில்லை. ஆயினும் பார்த்த அளவில் கூட அங்கு மிங்கும் சில பகுதிகள் ஆசிரியராலேயே எரிக்கப்பட்டிருந் தால் அவர் புகழுக்கும் அவர் நூலின் பயனுக்கும் நல்லதா யிருக்குமென்று எண்ணுகிறேன். வாசிப்பவர் மற்றப் பகுதிகளை வாசிப்பதையும் இவை கெடுத்துவிடக்கூடியவை. இத்தகைய பகுதிகள் மிகுதியில்லை தான். ஆனால் நஞ்சு நாழிகையா வேண்டும்—அதுவும் தேனமுதத்திற்கிடையில்? பதிப்பாசிரியர் அவற்றிற்கு இடந் தந்ததற்கு மிகவும் வருந்துகிறேன். ஆங்கில இலக்கியமாது இவ்வருவருப் பான சிற்றணிகளில்லாமல் இன்னும் சிறப்படைவாள் என்பது உறுதி. இவையன்றி வேறு சில பகுதிகள் உண்டு. இவை அருவருக்கத்தக்கவை யன்றாயினும் முதல்தரக் கவிதைத் தொகுதியில் இடம்பெறத் தக்கவையா என்று ஐயுறுவதற் குரியவை. இவற்றையும் அத்தகைய கவிதை யுடன் ஒருங்கு சேர்த்துக் காணும்போது டாக்டர் ஜான்

---

* எழுத்தாளர் பிரயர் (17-ம் நூற்றாண்டு) எழுதிய கவிதை நூல் "ஆங்கில கவிஞர்கள்". கூப்பர் அதனை இலத்தீனில் மொழி பெயர்த்தவுடன்தாய்மொழி முதனூலைப் பார்க்கும் அவாவுற்று அன் பின் அதனை வாங்கினார். பழைய பதிப்பான அது மிக விலையேறிய தாகவும் எளிதில் விற்காததாகவும் இருந்தது. அதற்கு இம் மொழி பெயர்ப்பால் விற்பனை ஏற்பட்டது ஆங்கில இலக்கிய வளர்ச்சிக்கு உதவும் என்பதையே கூப்பர் இங்கே குறிக்கிறார்.

ஸன் (பதிப்பாசிரியர்) நற்கவிதை பற்றி என்ன எண்ணம் கொண்டுள்ளார் என்பதை உணரக் கூடாதவனுயிருக்கிறேன். இத்தகைய இரண்டாந்தர, மூன்ருந்தரக் கவிதையை உட்படுத்தும் பதிப்பாசிரியர் முதல்தரமானவற்றையும் இதே தவருன அறிவால் விட்டுவிடப் போகிருரோ என்று வாசகர் கவலைப்பட இடமுண்டு. முதல்தரக் கவிதைகள் பலவற்றை அவர் சேர்த்திருப்பதற்கு நாம் இந் நிலையில் மகிழ்ச்சி யடைய வேண்டும்.

'ஸ்டாக்'கில் தங்களுடனுள்ள யாவருக்கும்—மிக உயர்ந்தவர் முதல் மிகச் சிறியவர் வரைக்கும்—உங்கள் அன்னையார் அன்பு மொழிகள் அனுப்புகிருர். அத்துடன் எனதும் சேர்த்து,

தங்கள்
வி. கூப்பர்.

13. கலையும் உலகியலும்

[இதுவுமது]

ஜுலை........79.

என் அரிய நண்பரீர்,

கண்ணுடிக் கடைக்காரர் திரு. ஜேம்ஸ் மார்ட்டின் கூறிய விலையில் பாதிக்கு பெட்ஃவோர்டிலிருந்து கண்ணுடி தருவித்துக்கொண்டேன். அவருக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளும்படி கோருகிறேன்.

நான் மார்கேட்டிலிருக்கும்போது ராம்ஸ்கேட்டைச் சென்று பார்வையிடும் இன்பவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்குள்ள படித்துறை கல்வேலையின் நேர்த்தி மிக்க வேலைப் பாட்டிற்குப் பேர்போனது—அதன் நேர்த்தியை

நானும் நேரில் கண்டேன். இப்போது அவ்வேலை முடிந்துவிட்டது. நமக்கு வேறு செலவோ தொந்தரவோ இல்லாமலே கற்கள் எவ்வாறு திறமையுடன் பொருத்தப் பெற்றுள்ளன என்பதை இங்கே பார்க்கலாம். இதைவிட மார்கேட் பார்க்கப் பகட்டாகவும் பலவகைகளில் உணர்ச்சி யூட்டுவதாகவும் உள்ளது என்பது உண்மையே. ஆம், நல்ல பாற்கட்டியைவிடச் செஷயர் பாற்கட்டி காரமான சுவையுடையதாகத்தானே யுள்ளது. அத்துடன் அதற்கு விலையும் குறைவு. மார்கேட்டில் எப்போதும் கூட்டம் மிகுதி. ஆட்களும் பலதரப்பட்டவர்கள். ஆயினும் கலைச்சுவையுடைய அன்பர்கள் இக் காரணத்துக்காகவே அங்கே போவதில்லை. ராம்ஸ்கேட்டிலோ கட்டணம் மிகுதி. ஆர்வலர் மட்டுமே வருவர். கூட்டம் குறைவாயி னும் அமைதியும் நன்மக்கள் கூட்டுறவும் மிகுதி. இவற்றைப் பார்க்கக் கட்டண உயர்வு ஒரு நல்ல முறை யென்றே கூறவேண்டும்.

திருமதி. அன்வின் ஊற்றுக்களில் குளிப்பதால் நல் உடல் நிலை பெறுவார் என்று நம்புகிறேன். ஆயினும் தட்ப வெப்ப நிலையை நம்பி அதில் மிகுதி பங்கு கொள்ளா திருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள். நொய்மையான உடல்களுக்கு அது எப்போதும் ஏற்றுக்கொள்ளாது.

இச்சமயத்தில் வழக்கறிஞர் ஸாம் காக்ஸ் கூறிய ஒரு கூற்று என் நினைவுக்கு வருகிறது. அவர் மிக ஆழ்ந்த சிந்தனையுடன் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தாராம்! நீங்கள் என்ன ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறீர்கள் என்று யாரோ கேட்டபோது அவர் "கடல் எவ்வளவு பெரிது; எவ்வளவு கடக்க ஒண்ணா ஆற்றலுடையது. இம்முழு

ஆற்றல் படைத்த பேருருவம் தன்னுள் சின்னஞ் சிறு நெத்திலியை எப்படிப் பிறப்பித்தது என்று வியப்படைகிறேன்" என்றாராம்!

உங்கள் வீட்டிலுள்ள அனைவருக்கும் என் அன்பு,

தங்கள்

வி. சு.

பி. சே. அரை பென்னி விலையுள்ள வெள்ளைப் பின்னல் நூலில் மூன்று கல்லெலைகள் நல்ல கடையில் பார்த்து வாங்கி அனுப்புக. நாட்டில் பிறபகுதிகள் எதனையும் விடத் தேனெட் தீவு அதற்குப் பேர்போனதென்று தெரிகிறது.

14. மார்கேட் கடற்கரை

[இதுவுமது]

ஜூலை 17, 1779.

அன்பு கெழுமிய நண்ப,

அங்கே தாங்கள் நுகரும் கடற் காற்றை நினைத்து இங்கே நாங்கள் பொறாமைப்படத்தான் வேண்டும். தோட்டத்திற்குச் சென்றால்கூட இங்கே மதில் சுவர்களிலிருந்து வரும் எதிர்வெக்கையைத்தான் பெறமுடிகிறது. வீட்டிலோ எதிர் சிகரத்திலிருந்து வெப்பு அடிக்கிறது........

குளிப்பு வகையில் நீங்கள் சோதனை முறைகளில் இறங்கிவிட்டதால் உங்கள் அனுபவமே உங்களுக்கு வழி

காட்டவேண்டும். ஆயினும் 'ஸ்மாலட்' அனுபவ*முதல் உங்கள் அனுபவம் வரை அனுபவத்திலிருந்து ஒரு முடிவு காண்பது அருமையே.......

நான் ஒருக்கால் மார்கேட் கடற்கரையில் உலாவிக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட அனுபவம் என் நினைவுக்கு வருகிறது. அக் கடற்கரை நீரருகிலிருந்து மலைபோல் செங் குத்தாய் எழுந்துள்ளது. மிகு தொலைவுக்கு ஒரு தடவைதான் இம்மலைக் கரையை உடைத்துக்கொண்டு பெரும்பாதைகள் நீர்வரையை எட்டுகின்றன. அலைவாயை அடையவோ அதனின்றும் மீண்டுவரவோ இப்பாதைகளல்லாமல் வழி யில்லை. நீரருகாமையிலேயே இக் கரையில் நான் ஒரு கல் தொலை நடந்து சென்றுகொண்டிருந்தேன். வேலி ஏற்றம் விரைந்து ஏறி வருவதை நான் கவனிக்கவில்லை. கவனித்த போது அது விரைந்தேறிவிட்டது. நான் புறப்பட்ட இடத்திற்கே உயிர் தப்ப ஓடிச்செல்ல வேண்டியதாயிற்று. ஏனெனில் முன்னேயுள்ள அடுத்த பாதையை அடைய இன்னும் நெடுந்தொலையிருந்தது. அன்று தலைதப்பியது தம்பிரான் செயலாயிற்று. புதுச்சோதனையிலிறங்கும்போது இதுபோதிரி திடீர் ஏமாற்றம் ஏற்படாமல் எச்சரிக்கையா யிருக்க வேண்டுமென்பதற்காகவே இதை எழுதுகிறேன். அன்று தப்பியோட முடியாத நிலையிலிருந்தால் நான்கு மணி நேரம் பாறையைப் பற்றிக் கொண்டு கடலலைகளிடையே உயிருக்குத் தத்தளித்திருக்கவேண்டும்.

---

* 'ஸ்மாலட்' 'ஃபிரான்ஸ் - இத்தாலிப்பயணங்கள்' எழுதிய ஆசிரியர். அணிமையிலுள்ள இந்நாடுகளுக்குச் செல்வதை அவர் நெடுநீளப் பயணமாகக் கருதிக்கொண்டு 'இந்நீண்ட பயணத்துக் கேற்ப உடலை, உரம் செய்து கொள்வதற்காக நான் நாள் தோறும் கடலிற் குளித்துவருகிறேன்' என்று எழுதினர்.

பெயரில் என்ன இருக்கிறது; அது ஒரு சிறு செய்தி என்றே எவரும் கருதக்கூடும். ஆயினும் நீங்கள் குறிப்பிட்ட நண்பருக்குப் பெயர் அவ்வாறு அமைந்தது பற்றி எண்ணியெண்ணிப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை. அவர் எதிர்காலத்தில் படையிலோ, சமய நிலையத்திலோ, சட்டத் துறையிலோ எதில் உயர் பதவியடைந்தாலும் அவற்றின் பட்டங்களுடன் சேர்த்து அவர் காப்டன் டப்பனி, பிஷப் டப்பனி, ஜட்ஜ் டப்பனி என எப்படிக் கூறினாலும் பொருத்தமாயிராதே! ஒரு மான்ஸ்ஃபீல்டுப் பெருமகனார் உரைவிளக்கம் கொடுத்தால்கூட அது மதிப்புப் பெறமுடியாது தான். அவரைப் புகழ்ந்து பாட ஆசு கவிஞர் முன் வந்தால்கூட டப்பனி வீரர் என்ற பெயரால் அவரை எவ்வாறு புகழ முடியும். என்றேனும் ஃபிரஞ்சுக்காரர் தேனெட் தீவைப் பிடித்து அத் தீவின் மொழியும் அரசியலும் ஃபிரஞ்சாக மாறி அவர் பெயர் மொழி பெயர்க்கப் பட்டாலாவது ஒரு நன்மை ஏற்படலாம். டப்பனி (டு பெனி அல்லது இரண்டு காசு) தே சூ (Deux sous) ஆகி ஆங்கிலேயர் அதனை இரு செருப்பு (டு ஷூஸ்) என்று மாற்றலாம். இன்றிருக்கும் பேரைவிட அப்போது அது பேரளவில் சற்று மதிப்பேறியதாகவே இருக்கும். ஏனெனில் இரண்டு செருப்பு இரண்டு காசைவிட விலையேறியதே.

தங்கள் அன்புள்ள

வி. கூ

15. சிறுசெய்திகள்

[இதுவுமது]

செப்டம்பர் 21, 1779.

மித்ரம் மம*,

எனக்காகக் கண்ணாடிக்காரர் வழங்கும் வைர ஊசி ஒன்று வாங்கும்படி கோருகிறேன். எனது செந்தூர மரக் கன்றுகளை வைத்து வளர்க்க இருமூடு தொட்டிகளுக்குக் கண்ணாடிகள் இணைத்துவிட்டேன். ஆனால் அடுக்களைப் பல கணிகளுக்கும் அவைகளை இணைக்க வேண்டும். அதற்குக் கண்ணாடிகளைச் சரியானவையாக்க அவ்வூசி வேண்டும். எனக்கு 'நூல்போட' த் தெரிந்தால் பெரும்பாலும் நான் ஒரு கண்ணாடித் தொழிலாளனாயிருக்க முடியும்........ அரசியலார் இச் சரக்கின் மீது இன்னும் ஒரு வரி மட்டும் போட்டுவிட்டால் நம் பெரு மக்களுக்கு இதை விடப் பயன்தரும் வேலை இராது. இன்றும் என்னிலும் பத்துமடங்கு பணமுடையவனாயிருந்தால்கூடச் சீன நாட்டுப் பெருமகன் எவனும் அத் தொழிலை மேற்கொள்ளக் கூச மாட்டான். சீன உயர்குடி மக்களைவிட எனக்குப் பணத் தேவை எவ்வளவோ மிகுதி. அப்படியிருக்க நான் ஏன் அதனை மேற்கொள்ளக் கூடாது. இத் தொழிலில் நான் ஈடுபட்டிருப்பது கண்டால் ரூசோ என்னிடம் ஒரு புதிய எமிலியைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடுவார் என்பதில் ஐயமில்லை........

என்னிடம் எட்டுப் புறா இணைகள் இருக்கின்றன. நான் தோட்டத்துக்குக் காலையில் போகும்போது அவை இரு

* என் நண்பரே என்பதற்கான வடமொழிச் சொற்கள். தமிழில் படித்த வகுப்பார் வடசொல் முதலிய பிற மொழிச் சொல் ஆள்வதுபோல ஆங்கிலேயரிடையே இலத்தீன் பிரஞ்சு முதலியன வழங்குவர்.

புறமும் வரிசையாக உட்கார்ந்திருக்கும். ஏனெனில், அங்கே நான் அவற்றுக்கு இரையிடுவது வழக்கம். உங்கள் கடிதத்தில் நீங்கள் "நான் ஒரு புறுவாயிருந்து சிறகிருந்தால் அங்கே பறந்து வந்திருப்பேன்!" என்று எழுதியிருக்கிறீர்கள். உங்கள் விருப்பம் நிறைவேறினுல் நீங்கள் கட்டாயம் இங்கே வந்து இருக்க வேண்டும். அப்படி நேர்ந்தால் அன்பு கூர்ந்து எந்தப் புறு நீங்கள் என்பதைச் சற்றுத் தெரிவித்து விடுங்கள். எல்லாப் புறுக்களுக்கும் இடும் தீனியைவிட நல்லதாகப் பார்த்து உங்களுக்குப் போடலாமல்லவா?

உங்கள் அன்னையாரும் நானும் நான்கு கல் தொலேவிலுள்ள கேஹார்ஸ்டிலுள்ள திரு. ரைட்டின் மாளிகைக்குச் சென்றோம். எனக்குப் புதிய மனிதர்களைக் காணப் பிடிப்பதில்லை என்று அறிந்த அவர் முன்கூட்டித் தம் வேலையாளை அனுப்பித் தாம் லீஸ்டர்ஷயர் போவதாகவும், நான் தோட்டங்களைப் பார்க்க விரும்பினுல் தாம் இல்லாமலே போய்ப் பார்க்கலாம் என்றும் கூறியனுப்பி யிருந்தார். அவர் அன்பான முன்கருதல் கண்டு மகிழ்ந்து சென்றோம். கண்ட காட்சிகளும் எனக்குப் பிடித்திருந்தன. இடம் அமைப்பானது. தோட்டமும் நல்ல ஒழுங்காய்ப் பண்ணைமைக்கப்பட்டிருந்தது. மூடு தொட்டிகளிலுள்ள செடிகளும் நன்கு தழைத்தே வந்தன.

உங்கள் அனைவருக்கும் என் அன்பு

வி. கூ.

16. டாக்டர் ஜான்ஸனும் கவிஞன் மில்ட்டனும்

[இதுவுமது]

அக்டோபர் 31, 1779.

என் அருமை நண்ப,

எழுத எதுவுமில்லை என்று தெரிவிப்பதற்கென்றே முந்திய கடிதம் எழுதினேன். அதற்கு மறுமொழியாகத் தாங்களும் ஒன்றுமே எழுதவில்லை. தங்கள் செயலால் எனக்குக் குறை; ஆனாலும் செயலுக்குச் செயல் பொருத்தமே. இப்பொழுது ஏதோ புதிய செய்திகள் தேடி எழுதுகிறேன்—உங்களிடமிருந்து இனியாவது ஏதேனும் நல்லுரைகள் வருமென்ற நம்பிக்கையுடன்.

தாங்கள் அனுப்பி வைத்த ஜான்ஸன் இயற்றிய 'வாழ்க்கை வரலாறுக'ளுக்கு நன்றி. அவை எனக்கு இன்ப மளித்தன. ஆனால் இதற்கு ஓரே ஒரு விலக்கு, மிகக் கடுமை விலக்கு உண்டு. பொதுவில் டாக்டர் ஜான்ஸன் தமக்கு வழக்கமான நல்லறிவுத் திறத்தையும் நடு நிலையையும் இங்கே நன்கு காட்டியுள்ளார். மில்ட்டன் ஒருவர் வகையில் மட்டும் அவர் அறிவுத்திறமையுடனன்றி நடுநிலையும் மீறிக் கடைப்பட்ட கொடுமை ஆற்றியுள்ளார். ஆனால் குடியாட்சிவீரன் வரலாற்றை முடியாட்சி ஆதரவுக்காக உபகாரச் சம்பளம் வாங்கும் ஒருவர் எழுதும்போது வேறு என்ன எதிர்பார்க்க முடியும்? முடியாட்சித் தத்துவத்தில் தமக்குள்ள உறுதியைத் தம் ஆதரவாளர்களுக்குக் காட்டவே அவர் இம்மாபெருங் கவிஞரின் பண்புகளைப்

பழிக்க முற்பட்டனர் போலும்! தனி மனிதர் என்ற முறையில் மில்ட்டனுக்கு நல் மனிதப் பண்பு எதுவும் அவரால் தர முடியவில்லை. தனி வாழ்வில் அகங்காரி, பொது வாழ்வில் எதனையும் பகைத்தொறுப்பவர் என்ற இந்த இரண்டு செய்திகளால் அவர் இவ் வாழ்க்கைத் திரையை முழுதும் ஓரே கறுப்பாக்கிவிட்டார். 'மில்ட்டனுக்கு ஏதேனும் நற்பண்பு இருந்ததோ இல்லையோ, டாக்டர் வரைந்த படத்தில் அவற்றின் நிழற்கோணத்தைக்கூடப் பார்க்க முடியாது. ஆனால் இதில்கூட மில்ட்டன் சார்பில் ஒன்று கூற வேண்டியிருக்கிறது. இயற்கைப் பகைமைக் குணம் ஒன்றன்றி அவரிடம் டாக்டருக்கு வேறு குற்றம் தேடியும் கிடைக்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. வேறு அகப்பட்டிருந்தால் வரலாற்றாசிரியர் அதனை மழுப்பியிருக்கக் கூடியவரல்லர் என்பது உறுதி.

கவிஞர் என்ற முறையிலும் அவர் மில்ட்டனிடம் மிகவும் கொடுமை காட்டியேயுள்ளார். மில்ட்டன் கவிதைத் தோகையில் அழகிற் சிறந்த சில இறகுகளை அவர் கொய்தெடுத்து அவற்றைத் தம் காலிலிட்டுச் சவட்டித் துவைத்துவிடுகிறார். அவரது ஒப்பற்ற சிறந்த முல்லைநிலக் கவிதை லிஸிடஸை அவர் கண்டிப்பதுடன் நில்லாது, முல்லை நிலக் கவிதையே சிறுபிள்ளைத் தனமானதென்று அவர் சிறுபிள்ளைத்தனமாக அலைக்கழிக்கின்றார். அந்நூலின் வருணனைத் திறம், அதன் யாப்பலங்காரம், அதன் ஒவ்வோரசையிலும் தொனிக்கும் பழம் பண்பாடு ஆகியவை எதனையும் அவர் உணர்ந்ததாகக் காணவில்லை. ஒன்று அவருக்குப் பாட்டின் ஓசையை உணரும் திறம் இல்லாதிருக்கவேண்டும், அல்லது மில்ட்டன்மீதுள்ள பகைமை அவ்வினிமையை உணரவொட்டாமல் அவர் காதை அடைத்திருக்க வேண்

டும் என்று நான் எண்ணுகிறேன். இதுமட்டுமோ? துறக்க நீக்கம் (Paradise Lost) போன்ற பாரிய இன்னிசைக் கலம்பகத்தை யாரேனும் எங்கேனும் கண்டதுண்டா? அது மாதாகோயிலின், இசைமேளத்தைப் போன்ற நிறை வீறும் டோரியர்[1] யாழின் நயமிக்க நுண்ணிசையும் ஒருங்கே வாய்ந்ததாகும். அதன் பல்சுவைப் பெருக்கத்துக்கு மிஞ்சியது எதுவுமில்லை. அதற்கொப்பானது வர்ஜிலின் ஈனீடு[2]க்குப் பிற்பட்டு எதுவுமில்லை யென்னலாம். ஆனால் நம் டாக்டர் கண்களுக்கு இதுவெல்லாம் தென்படவில்லை. வளமிக்க இப்பரிசுகளைப் புறக்கணித்துவிட்டு அவர் தம் கவனமுழுவதையும், செந்தொடையாப்பு ஆங்கில மொழிக்கு உகந்ததா அன்று என்பதிலும், பலர் கவிதையில் அது வெறும் சொல்மாரியாய் விடுகிறது என்பதிலுமே அலைய விடுகிறார். அப்பப்பா! அவர் நூலை எண்ணும்போது அவர் உடுப்புக்குள்ளிருக்கும் உபகாரச் சம்பள[3] முழுதும்

---

1. கிரேக்க நாட்டின் தென்பகுதியில் வாழ்ந்த கிரேக்கர் டோரியர். டோரியர் பெருநகரம் ஸ்பார்ட்டா. இவர்கள் நாகரீகம் பிற கிரேக்கர்களின் நாகரீகத்திலிருந்து பலவகையில் வேறுபட்டது. ஏனெனில் கிரேக்கருக்கு முற்பட்ட பண்டைக்கால நாகரீகமாகிய முசீனிய நாகரீகத்தின் தலைமையிடத்துடன் அவர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள்.

2. வர்ஜில் ரோமநாட்டுப் பெருங் கவிஞர். இவர் இலத்தீன் மொழியில் எழுதிய ஈனீடே அந்நாட்டின் முதன்மை வாய்ந்த பெருங்காப்பியம்.

3. டாக்டர் ஜான்ஸன் வறுமையுடன் போராடி முதன்மையான எழுத்தாளர் ஆனபின் அரசியலார் அவருக்கு உபகாரச் சம்பளம் அளித்தனர். அவர் இயற்கைப் பண்பும் இச்சம்பளமும் சேர்ந்து அவரை அக்கால அரசாங்கக் கட்சியான பழமை (டோரி)க் கட்சியைப் பின்னும் ஆதரிக்கத் தூண்டியது.

சிதறுமட்டும் அவரை நையப் புடைத்தால் என்ன என்றே எண்ணுகிறேன்.

இச்செய்திபற்றி நான் இன்னும் எவ்வளவோ கூற முடியும். இடம் போதாதென இத்துடன் நிறுத்துகிறேன். எங்கள் அனைவரின் அன்பையும் இத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புமிக்க,

வி. கூ.

17. "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான் துன்பம் உறுதல் இலன்" (திருக்குறள்)

[இதுவுமது]

டிஸம்பர் 2, 1779.

என் அரு நண்ப,

மனித உலகின் நிகழ்ச்சிகள் ஒன்றையொன்று தொடர்ந்து எத்தனை விரைந்து வருகின்றன! நமது இன்றைய கவலைகள் பெரும்பாலும் நாளைய கவலைகளாய் இருப்பதில்லை. அறிவுடையவர் ஒவ்வொரு இரவிலும் தூங்குமுன் தங்கள் கவலைகளை நோக்கி "உங்கள் கொட்ட முழுவதும் காட்டிவிட்டீர்கள், அன்பர்களே! ஆனல் இத்துடன் நீங்கள் மீளா விடைபெற்றுச் செல்லுங்கள்" என்று கூறுவது பொருந்தும்.

இவ்வெண்ணம் எனக்கு உங்கள் முந்திய கடிதத்தைப் பார்த்ததும் ஏற்பட்டது. அக்கடிதத்தின் பின்னும் நான் தங்கட்கு எழுதியுள்ளேனுனலும் அதற்கு இன்னும்

நான் மறுபடி அனுப்பவில்லை. நீங்கள் அக்கடிதத்தை எழுதுகிற சமயம் நீங்கள் உங்கள் வரிக் கணக்குகளிலீடு பட்டுப் பொருள்தர வருகிறவர்களைக்கூட ஒரு சனியன் என்று சீறிவிழும் நிலையில் இருந்திருக்கவேண்டும். அந்நிலை இப்போது மாறிவிட்டது. உங்கள் குடியானவர்களை நீங்கள் நகைமுகத்துடனேயே அனுப்பி வைத்துள்ளீர்கள் (பிறரை இன்பத்தில் ஆழ்த்த விரும்பினால் நீங்கள் அங்ஙனம் செய்யும் திறமற்றவரல்ல என்பது ஏற்கெனவே தெரிந்த உண்மைதான்!) இப்போது உங்கள் வேலையெல்லாம் பணப்பையைக் குலுக்கிக்கொண்டு சென்றதை எண்ணிச் சிரிப்பதுதான். ஆனால் உங்கள் நுண்ணறிவுள்ளபோ இப்போது புதியதொரு வருத்தத்தை உண்டுபண்ணிக்கொள்கிறது. மற்ற எவருக்கும் கொசுவின் அளவான இதில் நீங்கள் சிந்தனை செலுத்தாது சென்றாலும் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள். கொசு என அதை நான் கூறியதையும் இத்தகைய சிறு சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தாதவைகளென எவரும் உலகில் கருதமாட்டார்கள். ஆனால் அக் கொசு உங்கள் வரையில் இப்போது புகுந்துள்ளது கண்ணிமையிடுக்கினுள். உங்கள் துயரம் பொருளின் தன்மையினாலன்று, துன்பம் சிறிதும் தாங்கமாட்டாத நுண்ணிடத்தில் அது ஊறு செய்வதனாலேயேயாகும்.

என்வகையில் தேவைப்படும் பொருள்களைத் தேடிப் பெறுவதே எனக்கு மிகவும் கடினமாயிருக்கிறது. இத்தகைய ஒருவன் தன் தேசத்தின் தேவைகளைப் பற்றித் திட்டம் வகுக்க முடியுமானால், நீங்கள் கூறுகிறபடி அமைச்சர் நார்த் பெருமகனுக்கு வருகிற ஆண்டுக்கான தேவைப் பொருள் திட்டம் வகுக்க நான் ஒத்துக் கொள்வேன். ஆனால் இது மட்டும் நான் கூறமுடியும் :

எனக்கு இப்போது இருக்கும் ஒரு காணி* நிலத்தினிடமாகப் பத்துக் காணி இருந்து, மெக்ஸிக்கோ, பெரு ஆகிய நாடுகளிலுள்ள தங்கச் சுரங்கங்களைக் காட்டிலும் வளமிக்க தங்கச் சுரங்கங்கள் அவற்றில் காணப்பட்டால்கூட, அதில் என் வாழ்க்கைப் பிழைப்புக்கு வேண்டிய ஒரு சில கழஞ்சுகள் எடுத்துக்கொண்டு மீந்ததை அரசியலாருக்கு முழுமனத்துடன் வழங்கத் தடை எதுவும் இல்லை. என் தனி நலனை நிறைவுபடுத்த நாள்தோறும் சுரங்கக் குழிக்குள் இறங்கி யேறுவதை விடத் தேசீயக் கடன்பொறுப்பை ஒழிப்பதிலேயே எனக்கு மகிழ்ச்சி மிகுதி. இம் மனப்பான்மை தேசப் பற்றுணர்ச்சியே என்பதை நீங்களும் ஒப்புக்கொள்ளுவீர்கள். ஆனால் இவ்வுணர்ச்சி பெரும்பாலும் அதனால் எந் நன்மையும் செய்ய முடியாத மக்களிடையிலேயே இருந்து வருகிறது. ஒரு கைப்பிடி செல்வம் ஒருவனுக்கு வந்துவிட்டால், செல்வனாகும் பேராவலின் முதற்படியில் அவன் கால் வைத்துவிடுகிறான். அவன் வறுமைப்பட்ட போது கொண்டிருந்த தேசப் பற்றை உடனே கைநழுவ விட்டு இரு கையாலும் செல்வத்தை அள்ளப் பார்க்கிறான். இவ்வாய்ப்புக் கிடையாதவனோ தேசப் பற்றைக் கையில் இறுகப் பற்றிக்கொண்டு "ஆ, எனக்கு ஆற்றல் மட்டும் இருந்தால், எவ்வளவு நன்மைகளை நான் செய்து விட மாட்டேன்!" என்று அங்கலாய்க்கிறான்.

உங்கள் அன்னையார் கூறியனுப்புகிறார், "என் நல்லன்பைத் தெரிவியுங்கள்" என்று. அதனுடன்

* காணி, வேலி என்னும் தமிழ் நாட்டு நில அளவைகளுக்கு இன்று ஏக்கர் (acre) என்ற ஆங்கில அளவை வழங்குகிறது.

என்னுடையதையும் சேர்த்தனுப்ப இடம் போதவில்லை. அதை உங்கள் ஊகத்துக்கே விட்டுவிடுகிறேன்.

இங்ஙனம் தங்கள்

வி. கூ.

18. நுண்ணறிவும் பொது அறிவும்

பிப்ரவரி 27,1780.

என் அரிய நண்ப,

என் கடிதங்களை வாசிப்பதில் நீங்கள் ஆவலுள்ளவர்களாய் இருப்பது காண, அவற்றை எழுதுவதில் எனக்கும் விருப்பம் மிகுதியாகிறது. ஆயினும் ஒரு கடிதத்தைக் கூட நான் நல்லதென்று கருத முடியாததை நினைக்க, அவை வாசிக்கத் தக்கவை என்று நீங்கள் நினைப்பதில் வியப்படையாமலும் இருக்க முடியவில்லை. இதனால் உங்கள் சுவைத்திறத்தை நான் குறை கூறுவதாக எண்ணாதீர்கள். எனது அடக்கத்திற்கும் பணிவுடைமைக்கும் அடையாளமாகவே இவற்றைக் கூறுகிறேன் என்பதை நீங்கள் மனத்திற்கொள்ளும்படி கோருகிறேன்.

பொது நிலை அறிவுடையவர்கள்தான் தம் கைத்திறங் கண்டு மன நிறைவுறுவர். முதனிலை அறிவு படைத்தவர்கள் ஒரு போதும் மனநிறைவடைவதில்லை என்பது ஸர் ஜோஷுவா ரெய்னல்ட்ஸ் கருத்து. அவர்கள் எப்பொருள் பற்றி எழுதினாலும் அவ்வெழுத்து எவ்வளவு சிறந்ததெனப் பிறர் கருதக்கூடியதாக இருந்தாலும் அவர்களளவில் ஒருபோதும் அவற்றைப் போதும் என்று எண்ணுவதில்லை. இதற்குக் காரணம்

என்ன? அவர்கள் எப்போதும் பிற மாந்தர் எண்ணிப் பாராத ஒரு முழுநிறை அழகுக் குறிக்கோளை உள்ளத்தில் கொண்டுள்ளார்கள். இந் நிறைஅழகை என்றும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த அவர்கள் அதனை என்றும் முழு அளவில் தீட்ட முடியாமலேயிருக்கின்றார்கள். அரிய ஸர் ஜோஷுவா! இக்கடிதம் தொடங்கும்போது நான் உம்மை எண்ணியே இருக்கவில்லை. ஆனால் நீங்களாக வந்து தோன்றியமை கண்டு மகிழ்ந்து வரவேற்கிறேன். உம் கருத்து என்னைத் திறை கொண்டுவிட்டது. நான் உங்கள் அடி நின்ற தொண்டனாகுக.

உங்கட்கு இதற்கு முந்திய கடிதத்தை எழுதியபோது 'தற்காலத் தேசபற்றாளர்' என்ற செய்யுள் நூற் படி ஒன்றை அனுப்பவிருந்தேன். ஆனால் ஒன்றிரண்டு அடிகள் சிறிது மோசமாயிருந்தன. அவற்றைத் திருத்த முயன்றேன். திருத்தமுடியவில்லை. திருத்தாமல் அனுப்பவேண்டாம் என்று அனுப்பவுமில்லை. அதற்கிடையில் நான் பத்திரிகைகளில் திரு. 'பர்க்'கின் சொற்பொழிவைப் பற்றிப் படித்தேன். அதில் அவர் உணர்ச்சிவேகத்தைக் கண்டதும் நான் என் கவிதையை எரித்துப் போட்டுவிட்டேன். அவ்வந் நாளைய செய்தியைப் பற்றி யெழுதுபவர் நிலை இதுதான். ஒன்றிரண்டு மணிநேரத்துக்குள்ளாகவே சூழ்நிலைகள் மாறிவிடுகின்றன. அத்துடன் எழுதியவர் கருத்தும் மாறிவிடுகிறது. காலையில் நேர்மையான திறமிக்க வசைப்பாவாக அமைந்தது மாலையில் ஒரு காட்டுப்பகைச் செயலாகிவிட்டது. அணிமையில் தான் எழுதியதன் மீதே ஆசிரியர் கண்டனத் தீர்ப்புச் செய்ய வேண்டி வருகிறது. இவ்வகையில் என் பொன்னெழுத்து என் கைபட்டே நச்சுக்காளான் பட்டமரம் போல் பொடி பொடியாய்விட்டது. அந்தோ!

இச்சிற்றறிவை வைத்துக்கொண்டு நான் என்ன செய்யட்டும்! பெருங்காரியங்களைச் செய்வதற்குப் போதிய அறிவுத்திறம் எனக்கு இல்லை. நான் செய்யக்கூடும் இச்சிறு செய்திகளோ என்றால், அவற்றின் தலைப்பைப் பிடிக்குமுன் அது புகையுருவாகிவிடுகிறது. அதை நான் வளர்க்கும் மாடப்புறாவைப் போலவே நான் பேணவேண்டும். அதாவது பெரும்பாலும் அடைத்துவைத்திருந்து இடையில் சில நேரம் அறைக்குள்ளாகவே உலவ விட்டுப்பின் கூட்டிலடைத்துவிடலாம். இம்முறையில் சற்று உலாவ விட்டதே கீழேதரப்படும் பகுதியாகும். அதன் முறைதான் இத்தகைய சிறுமையுடையதே தவிர இப்பொருள் சிறிதல்ல. பழங்கதையில் கூட வாய்மை இருக்கலாமல்லவா? எங்கிருந்தாலும் வாய்மை வாய்மைதானே........

நீங்கள் நான் கூறப்போவதைக் கேட்டிருப்பீர்கள் என்றே நினைக்கிறேன். எல்லாரும் கேட்டிருப்பார்கள். ஏனெனில் அதனைப் பரிந்து பராவி ஏற்கெனவே ஒரு விளம்பரமும் வெளியிடப்பட்டிருக்கிறது. தங்கள் உறவினர் ஒருவர் ஒரு சிறு நூல் வெளியிட இருக்கின்றாராம். அந்நூல் பல மனைவி மணத்தை ஆதரித்து அதுவே நேரான மணம் என்று வாதிடுகிறதாம்! அதே சமயம் பல மனைவிகளைத் தான் மணக்கலாம், பல கணவர்களை மணத்தலாகாது என்றும் அது வற்புறுத்துகிறதாம். ஆசிரியர் இம்முடிவுக்குக் காட்டும் ஆதாரம் விசித்திரமானது. பெண்களுக்கு அநீதி செய்யும் ஆண்களுக்குச் சரியான தண்டனை தாம் மணம் செய்துகொண்டவர்களாய் இருந்தாலும் அநீதிக்காளான பெண்களையும் மணந்துகொள்ளும்படி சட்டம் செய்வதுதான் என்று அவர் கூறுகிறார். இங்கே அருகில் தங்கியுள்ள ஒரு படைப் பிரிவின் தலைவன் ஒரு

வீரனின் குடிப்பழக்கத்தை நிறுத்தச் செய்த ஏற்பாட்டை இது நினைவூட்டுகிறது. மட்டற்ற குடியால் அவனுக்குச் சலிப்பூட்ட எண்ணி ஆறு வாரங்களுக்கு வேண்டுமட்டும் குடிக்க இணக்கமளிக்கப்பட்டதாம்! ஆனால் இதனால் அவன் குடிப்பழக்கம் மாறவில்லை. இன்னும் குடித்துக்கொண்டு தானிருக்கிறான். இதனால் தெரிவது யாதெனில், ஒரு தீமையை மற்றொரு தீமை விழுங்கலாம்; அதன் விளைவு மற்றொரு தீமை வளர்வதே தவிரத் தீமை எதுவும் குறைந்த தாக ஆய்விடாது என்பதே.

மேற்கூறிய நூலை எழுதிய மனிதரிடம் பற்றுக் கொண்டவர்கள் புத்தகத்தை எண்ணி வருந்தவேண்டியது தான்.

தங்கள்

வி. சூ.

19. ஒதுங்கி வாழ்பவர்களின் நேரப்போக்கு

[இதுவுமது]

ஏப்ரில் 6, 1780.

என் அருமை நண்பரீர்,

........புத்தகங்கள் வாங்குவது பற்றி நீங்கள் எழுதிய செய்திக்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன். அதிலும் இன்னொருவர் கைப்பணத்தைச் செலவு செய்து, எனக்கு மதிப்பும் குறையாமல், அவருக்கும் சேதமில்லாமல் புத்தகம் வாங்கிப் பயன்படுத்தும் வாய்ப்புக் கிடைப்பதுபற்றிப் பன்மடங்கு மகிழ்ச்சியே. நேரப்போக்குகள் எல்லாருக்கும் அவசியம்—அதிலும் என்னைப்போல ஒதுங்கி வாழ்பவர்

கட்கு அது மிகவும் அவசியம் ஆகும். இது காரணமாகவே நான் சில சமயம் பாட்டுக் கட்டுகிறேன். சில சமயம் தச்சு வேலையை மேற்கொண்டு பறவைக் கூண்டுகளேனும் செய்கிறேன். தோட்டக்காரனுயுள்ளேன். அணிமையில் இந் நேரப்போக்கே எனக்கு ஓவியம் வரையக் கற்பித்து என்னை ஓர் ஓவியக்காரனுக்கியுள்ளது. இரண்டு திங்களுக்கு எனக்கு அந்நிலையில் எதுவும் தெரியவராது என்பதை நோக்க, நான் அடைந்த விரைந்த முற்போக்கு வியப்படைதற்குரியதேயாகும். என் கலைப்படைப்பை உங்கள் அன்னையாரிடம் காட்டியபோது அவர்கள் ஒரே பாராட்டாகப் பாராட்டினுர்கள்.

நீங்கள் என்னிடம் அடக்கமாகக்கூறும் எதுவும் வெளிவர நேருமென்று நீங்கள் அஞ்சவேண்டியதில்லை. இவ்வகையில் உங்கள் அன்னையாரின் கண்டிப்பும் நயமும் உங்களுக்குத் தெரிந்ததே. என்னைப்பற்றிய வரையிலோ மறை 'காத்தல்' பற்றியே நான் சில நாளைக்கு முன் ஒரு கட்டுரை வரைந்துள்ளேன். அந்த நாள் முதல் இந்த நாள்வரை ஒரு மறைசெய்தியைக் கூட நான் இதுவரை வெளியிட்டவனன்று........

உங்கள் வீட்டிலுறையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றனுக்கும் என் அன்பு—இது பழக்கமான உரையேயாயினும் அக்காரணத்தால் பொருளற்ற உரையன்று. உங்கள் அன்னையாரும் தம் அன்பை அனுப்புகிருர்கள்—அது தாய்வழியாதலால் அது தனிக்கூட்டில் செப்பம் செய்யப்பட்டு இதனுடன் வருகிறது.

வி. கூ.

20. நுழையா விருந்தும் அழையா விருந்தும்

[தூய திரு. ஜான் நியூட்டன் அவர்கட்கு]

ஆல்னி, ஏப்ரில் 16, 1780.

நான் கடைசியாக இதற்கு முன் எழுதியதன் பிறகு திரு........இவ்விடம் வருகை தந்தருளினர். புது விருந்தினராகிய அயலார் வரும்போது அவர் வரவேற்கப்பட்டனர் என்று தெரிவிக்கும்முறையில் வெளிப்பட காட்டும் ஆர்வத்துடன் அவரை வரவேற்க எனக்குத் தோன்றவில்லை. இது அவர் நடைகாரணமாகவே. அது களங்கமற்ற எளிமையை விடத் துணிவையே காட்டுவதாயிருந்தது. அந்நடையிலிருந்தே வரவேற்புக்குத் தேவையில்லையென்றும், அச்சிறு செயலில்லாவிட்டால் அவர் அதை ஒரு குறையாக எண்ணுபவரல்லர் என்றும் தெளிவாகத் தெரிந்தது. பலவிடங்களுக்குப் பயணம் செய்து பழகிய தோற்றம் அவரிடமிருந்தது. ஆனால், பல விடங்களுக்குப் பயணம் செய்து பழகிய நாகரிக மனிதர் தோற்றம் எள்ளளவும் அவரிடம் இல்லை. ஆங்கில மக்கள் பண்பிலூறியுள்ள குணமான தன்னடக்க மிகுதியும் அவரிடம் இல்லை. அதே சமயம் பிறநாட்டு நன்மக்களைப்போல எளிதாகப் பழகி வரவர நெருங்கியுறவாடும் இயல்பு அவரிடம் இல்லை. அவர் வந்தவுடனே திடுமெனத் தொடர்புகொண்டு விடுகிறார்.

அவர் எப்போதுமே உரத்துப் பேசுகிறார். அவர் ஆரவாரத்தைக் கேட்டவுடன் நம் கிளிப்பிள்ளைகளும் பூவைப் பறவைகளும் தாமும் கலகலத்து ஆரவாரம் செய்கின்றன. இவ்வாரவாரம் கேட்டு அவர் பின்னும் உரக்கப் பேச, அவையும் அவரும் மாறிமாறிப் போட்டியிட்டுக்கொண்டே

யிருக்கின்றனர். இருசாரார்பினரும் தம் போட்டியாற்றலைப் பின்வாங்கச் சித்தமாயில்லை. அவர் வருகையின்போது இம் மற்போர் எங்களுக்கு ஒரு காட்சிவிருந்தா யிருந்தது. ஆனால் அப்போட்டியில் எஞ்சி நின்றவை பறவைகள் தான். நாங்களும் அது போலத்தான் என்று கூறவேண்டும். பாவம்! தாம் தாம் வென்றுவிட்டோம் என்று அப் பறவைகள் தருக்கி யிருக்கக்கூடும். நாங்கள் உடனிராவிட்டால் ஒரு கண நேரத்தில் தம்மை அவர் கொன்றிருப்பார் என்பது அவைகட்கு எங்ஙனம் தெரியும்!

வி. கூ.

21. உரையாசிரியரும் 'திருத்துரை' யாசிரியரும்

[இதுவுமது]

மே 10, 1780.

அன்புடை நண்பரீர்,

ஆசிரியர்கள் தங்கள் தங்கள் நூலின் மூல பாடங்களைத் திருத்திப் பதிப்பிக்கும் வரை வாழ்ந்திருக்கக் கூடுமானால், இந்த உரையாசிரியர் 'திருத்துரை' யாசிரியர்களெல்லாம் பயனற்ற கூட்டத்தினராகவே போயிருப்பர். எடுத்துக்காட்டாக, என் முந்திய கடிதத்தில் காணப்பட்டதாக நீங்கள் குறிப்பிடும் இடையறிவு* என்ற

* ஆங்கில முதனூலில் பிழைப்பட்ட சொல் tube (குழாய்). இதன் மெய்வடிவம் ink (மை). தமிழர் இதே சுவை உணரச் சொற்கள் இங்கு மாற்றப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன; சுவை முதலில் உணரப்படாதவிடத்து மொழிபெயர்ப்புப் பயனில்லாததாய்விடும்.

தொடர் டாக்டர் பெண்ட்லி போன்ற திருத்துரையாசிரியர் கள் கண்ணில் பட்டால் அவர்கள் அதை அப்படியே மூல பாடமாகக் கொண்டு இடையறிவு, முதலறிவு, கடையறிவு என்றபாகுபடும் ஆராய்ச்சியும் செய்திருப்பர். அல்லது இடை என்பதை அடை, உடை என மாற்றியமைத்து அதற்கான விளக்கவுரை விரிவுரைவாதம் நடத்துவார். அவ் வாத எதிர்வாதத்தில் ஐரோப்பாக் கண்டத்தில் பண் டிதர் குல முழுவதும் இருபெரு முகப்புக்களாக நின்று போராடும். இத்தறுவாயில், இப்போது நான் செய்வது போல, ஆசிரியரே இடையிட்டு வந்து தான் உயிருடன் இருப்பதால் தனக்கும் இடமுண்டு என்று கூறி இடை யென்று தோற்றுவது ஆசிரியர் விரைந்த திருந்தா எழுத்தின் விளைவே என்றும், அவர் மனத்தில் எண்ணியது இசைதான் என்றும், முன்பின் தொடர்பு நோக்கித் தக்க சொல்லை அமைக்க நினைத்தாலே இதனை நிரப்பிவிட முடியும் என்றும் மெல்ல உரைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்—ஆனால் இத்தறுவாயில் கூட எனக்கு டாக்டரிடம் ஒரு அச்சம் பிறக்கிறது. ஆசிரியர் பாடத்தை உறுதி செய்யும் உரிமையில் ஆசிரியருக்குத் தான் முதலிடம் என்று அவர் ஒத்துக்கொண்டு வாதத்திலிருந்து விலகுவாரோ என்னவோ? ஒன்று மட்டும் உறுதியாகக் கூறலாம்! அவர் விலகினாலும் சரி, விலகாவிட்டாலும் சரி, உலகம் விலக்கி விடுவதில் ஐயமில்லை!!

எனது மைக்கேல் எஞ்செலோ*வாகிய ஜேம்ஸ் ஆண்ட்ரூஸ் என் ஓவியக் கலையை மிகவும் புகழ்ந்து

* மைக்கேல் ஏஞ்சலோ இத்தாலி நாட்டு முதல் பெருங் கலைஞருள் ரஃவேலுடன் ஒத்த இடமுடையவரும் அறிஞருள்ளும் தலைசிறந்தவரும் ஆவர். இங்கே கலைஞர் என்ற பொதுச் சிறப்புப் பொருளில் அப்பெயர் வழங்கப்பட்டுள்ளது.

பாராட்டுகிருர். ஆயினும் உங்கள் அறையை அணி செய்விக்கும் தொழிலை நீங்கள் எனக்குத் தரக்கூடும் அளவுக்கு நான் வெற்றி பெற்றேனென்று நான் பெருமை யடைய முடியும் என்று எண்ணவில்லை. இத்தகு நிலை என்றேனும் வரக்கூடும் என்றிருந்தால்கூட நான் மகிழ்ச்சி யுடன் பொறுமையாய் உழைக்க முடியும்........

ஒரு காக்கையோ அண்டங் காக்கையோ திருமதி ஆஸ்ப்ரேயின் பழத்தோட்டத்தருகிலுள்ள இளஞ் சவுக்கு மரத்தில் கூடுகட்டியிருந்தது. நேற்றடித்த நீடித்த புயற் காற்றில் அது பெரிதும் அலைப்புற்று எத்தனையோ தடவை முற்றிலும் அழிவுக்கு வந்துவிடுமோ என்ற நிலையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. அதைக் கண்டு கவலையுற்ற உணர்ச்சியில் ஒரு பாட்டு எழுதியுள்ளேன்.

வி. கூ.

22. வழி விபத்து

[திருவாட்டி நியூட்டன் அவர்கட்கு]

ஜூன்; 1780.

அன்பு மிக்க அம்மையீர்,

திரு. நியூட்டனுக்கு நான் கடிதம் எழுதினல், அவர் அதற்குச் சரியாக மறு கடிதமெழுதுகிருர். தங்கள் மறு மொழியோ ஒரு மீன் உருவத்தில் வருகிறது. ஆனல் கடிதத்திற்கு மீனனுப்பும் தங்கள் வகையில், மீனுக்கு நன்றியும் கடிதத்தில் தான் தெரிவிக்கமுடியும். ஆயினும் தாளில் தெளிவாக மையும் மைக்கோலும்கொண்டு நீங்கள் இந்த ஆர்ச்சர்டுலைஸடை மறக்கவேயில்லை என்று எழுதி

ஞால் எவ்வளவு எனக்குப் புரிந்துகொள்ளுமோ அதை விடத் தெளிவான மொழியில் அம் மீன் அதே உரைகளைக் கூறத்தான் செய்தது. மீன்கள் உயிருடனிருக்கும் போதே பேசுவதில்லை—குரலெழுப்புவதுகூட இல்லை. இதுவோ செத்த மீன். ஆயினும் தங்கள் நிருக்கை வண்ணம் திரு. நியூட்டன் மைக்கோல் பேசியதற்கொப்பாகவே திட்ட வட்டமாக எனக்குச் செய்தி கூறும்படி மீனுக்குத் திறமளித்துள்ளது!

என்னளவில் ஒரு கடிதம் எழுதுவதென்பது எப்போதுமே துணிச்சல் மிக்க ஒரு செயலாகும். ஆனால் இந்தக் கடிதத்தைப் போன்ற துணிச்சல் மிக்க கடிதம் நான் எப்போதுமே எழுதியதில்லை. இந்தக் கடிதத்தையும் இறுதி வரை எழுதி முடிப்பேனோ, அல்லது இடையிலேயே விட்டுவிடவேண்டிவருமோ என்னவோ தெரியவில்லை. என் வேலைகள் எதிலுமே எனது சூழ் நிலைகள் எதிர்பாரா வகையில் குறுக்கிட்டுத் தடை செய்துவிடுகின்றன. எழுதுகிற வகையிலோ தடைகளுக்குக் குறைவில்லை. எழுத வேண்டும் என்ற எண்ணத்துக்கே இருநூறு தடைகள் வந்துவிடுவதுண்டு!

டாம் ஃவ்ரீமனுக்கு நேர்ந்த உருக்கமிக்க இடையூற்றைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள். ஹானிஸ்லிப் சந்தைக் கூட்டத்திலிருந்து வெஸ்டன் லேன் வழியாக டாம் ஃவ்ரீமனும் அவர் மனைவியும் பிறரும் இரவு பத்து மணிக்கு வந்து கொண்டிருந்தார்கள். பிறரும் என்பதை விளக்கமாகக் கூறினால் அவர்களின் குதிரைகள் மரப்பெட்டிகள் நாற்காலிகள், அலமாரிகள் ஆகியவை என்று கூறவேண்டும். அவர்களின் குதிரை மிகவும்

கற்பனைத் திறன்*வாய்ந்ததாயிருந்திருக்கவேண்டும். அத் தெரு மூலையில் அது எதையெனும் கண்டதோ, கற்பனை செய்ததோ அல்லது கண்ட ஒன்றனைக்காணுத ஒன்ருகக் கற்பனை செய்ததோ தெரியவில்லை. அந்தக் குதிரையும் அது பற்றிப் பின்ஞல் எதுவும் சொல்லவோ பாடலெழுதவோ செய்யவில்லை. திடுமெனஅவ்விதம் தோற்றிஞல், அதிலிருந்து செயலூக்கமும் திடீர்ப் பாய்ச்சலும் சில சமயம் உறுப்புக் குறைபாடும்கூட ஏற்படுமன்ஞே? எனவே குதிரை திடுக் கிட்டது; நடுப்பாதையிலிருந்து நாலு காலும் தூக்கி யெழுந்தது; பாதை நடுவில் தொடங்கிய இச்செயல் வியக்கத்தகும் விரைவுடன் பாதையின் ஒரு புறமாகச் சாய்வுற்றது. குதிரைக்குச் சற்றும் பின்னிடையா விரை வுடன் நம் சொகுசுக்காரச்சீமானும் சொகுசுக்காரச் சீமாட்டியும் வண்டியை விட்டு இறங்கிவிட்டனர். குதிரை யாரின் செயல் இத்துடன் நிறைவு பெறவில்லை. தமக்கு வரவிருந்த இடையூறு கடையூருய் விட்டதாக அவர் எண்ணவுமில்லை. நாலுகாலும் எட்டுக்காலாக அவர் பாய்ந்து

---

* சிலப்பதிகாரம், கம்பர் கவிதை ஆகியவை கற்பனைக் கவிதைத் துறையை (Romantic poetry) சார்ந்தவை. சங்க இலக்கியம் வாய்வியல் கவிதைத்துறையை (Classical poetry) சார்ந்தது. இவ்விரண்டிலும் போலிக்கவிதை உண்டு. கூப்பரின் இக்கடிதம் கற்பனைக் கவிதையை சிறப்பாகப் போலிக் கற்பனைக் கவிதையை ஏளயாண்டி செய்கிறது. அவர் காலம் (18-ம் நூற்ருண்டு) வாயவியல் கவிதை சிறப்புற்றிருந்த காலம். ஆயின் அது சங்கக் கவிதை கிரேக்க கவிதை போன்ற உயர் வாய்வியல் இலக்கியமல்ல. கூப்பரே வாய்வியல் காலத்தில் எழுந்த கற்பனைக் கவிஞர் என்பது நினைவில் வைக்கத்தக்கது. ஆஞல் அவர் இப்போர்வையில் எழுந்த போலிகளை வெறுத்தார்.

சந்தின் பக்கம் இருப்பதாகத் தாம் எண்ணிய வாயில் கதவைத் திறக்காமலே—வாயில் கதவு இருக்கிறதா இல்லையா என்ற பகுத்தறிவாராய்ச்சியில் இறங்கும் கற்பனையற்ற திறனுக்கு இடம் தராமலே—அவர் தாவிவிட்டார். அவர் விரைவு ஒன்று பத்து நூறு என்ற தானப் பெருக்க வேகத்தில் சென்று ஆல்னியில் முடிவுற்றது. படுக்கையிலிருந்த என் காது செவிடுபடும்படி 'உலகுகடந்த' பேரரவம் கேட்டது. எங்கள் இரும்படுப்புக்கள் எழுந்து தகரப் பீப்பாய்களின் மீது மோதின அரவமே அது. வீட்டிலிருந்த காய்கறி தின்பண்டங்கள் யாவும் தெருவில் சிதறிக்கிடந்தன. திரு. லூவலியீடுட்ப் பலகணி துண்டு துண்டாய்ச் சிதறிக் கிடந்தது.

இத்துடன் என் விரிவுரை நின்றால் இது ஒரு நகைச்சுவை நாடகமாக மட்டுமே இருந்திருக்கும். ஆனால் மறு நாட் காலையில் அப்பாவி அம்மையாரின் தோள்பட்டை எலும்பு முறிந்துவிட்டதாகவும் மீண்டும் முன்போல் வேலை செய்ய முடியாதென்றும் தெரிய வந்தது.

எனக்குக் கடிதம் எழுதும் திறன் இருந்திருந்தால் மேலே எழுதியதெல்லாம் பத்து நாளைக்கு முன்பே தங்களுக்கு எழுதியிருக்கவேண்டும். ஏனெனில், இவை பத்து நாட்களுக்கு முன் நடந்தது.

அம்மையீர், தங்கள்

வி. கூப்பர்.

23. திரு. போப் கடிதங்கள்

ஜூன் 8, 1780

என் அரிய நண்ப,

உங்களிடமிருந்து கடிதம் வரும் வரை காத்திருக்காமலேயே நான் உங்களுக்கு எழுதும் இன்ப உழைப்பில் இறங்கியிருப்பேன். அங்ஙனம் செய்யாததற்குக் காரணம் உண்டு. அதனை நீங்கள் சற்றும் ஊகிக்க முடியாது. உங்கள் அன்னையார் மூலம் என் கடிதங்களால் உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி பற்றியும் அதன் பயனாக நீங்கள் என் திறத்தைப் பாராட்டிப் புகழ்வதுபற்றியும் கேள்விப் பட்டேன். எனக்குப் புகழ்ச்சி யென்றால் எவ்வளவோ பிடித்தம்—அதிலும் பகுத்தறிவும், திறமும், நயமாக உரைக்கும் பண்புமுடைய தம் போன்றவர் பாராட்டென்றால் கேட்கவேண்டியதில்லை! ஆனால் அப்புகழ்ச்சியால் தான் இப் புதுமை வாய்ந்த பயன் என்னிடம் ஏற்பட்டது. என் நண்பர் என் கருத்துத்திறத்தை வியக்கிறாரானால், இனி அதை யின்னும் பன்மடங்காக்கவேண்டும் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. ஒரு நகை நயத்துக்குப் பத்து நகை நயம், ஒரு கருத்துப் புதுமைக்குப் பத்துக் கருத்துப் புதுமை என்று நாட்டம் சென்றது. இச் சிறுமைத்தனம் வாய்ந்த வீண் பெருமை என்னையும் போப்பைப் போன்ற ஒரு அருவருக்கத்தக்க கடித எழுத்தாளராக்கியிருக்கக்கூடும். அவரும் ஒவ்வொரு வாசகமும் ஒரு புதுமைக் கருத்துடனும் ஒரு புதுச்சொல் துடுக்குடனும் விளங்காதிருந்தால், எழுதுவது வீணென்று நினைத்துப் பாடுபட்டார். இதன் பயனாகவே தான் அவர் நான் அறிந்துள்ள கடித எழுத்தாளர் அனைவரிலும் மிக வெறுக்

கத்தக்க எழுத்தாளரானுர் என்று நான் எண்ணுகிறேன். ஆகவேதான் என் வீண் பெருமையினுல் உங்களுடைய ஏற்பட்டின் உடனடி விளைவு என் மனத்திலிருந்து சற்று மறையட்டும் என்று நான் கடிதம் எழுதாது காத்திருந் தேன். அதனுல் நான் மறுபடியும் என் வழக்கமான முறை யில் மனதில் இயற்கையாய் எழும் எண்ணங்களையே எழு துவதென்று உறுதி கொண்டுள்ளேன். *

1. வயல் வெளியிலோடும் மாசில் நீரோடையே,
   கயல் விழிய மாதர் கண்ணிமைக் கோர்காட்டாவாய்;
2. துடித்தாடும் இவ்வுலகின் ஆரவாரத்திடையே
   அடக்கமொடு கற்பும் அசைந்தாடச் செல்லுவாய் !
3. மென்மையினுய், எனினும் புல் வேற்றுமைகள் [மாற்றுகின்ற
   வன்மையினுய் ! நின் குறிக்கோள் செல்லுகின்ற [தன்மையினுய் !
4. செயலிலெல்லாம் கவினுடையாய், கவினுளெலாம் [பயனுடையாய்,
   அயலிடமும் செயலிடமும் செலவிடமும் அருள் [பொழிவாய் !
5. படிகநிற நீர்ப்பரப்பே பண்பார் உன் உளப்பரப்பாய்
   நெடிதுறுவான் ஒளி நிழற்றும் நினது முகம் இங் [கெமக்கே !

---

* ஆங்கில மூலப் பாடல் இது.

1. Sweet stream! that winds through yonder glade—
   Apt emblem of a virtuous maid!
2. Silent and cheste, she steals along,
   Far from the world's gay, busy throng;
3. With gentle, yet prevailing force,
   Silent upon her destined course;
4. Graceful and useful, all she does,
   Blessing and bless'd where'er, she gose;
5. Pure bosomed as that watery glass,
   And heaven reflected on her face.

இங்கே உவமை கன்னிப் பெண்களுக்கே யானாலும் அது உங்கள் தங்கை ஷட்டில் வொர்த் போன்ற கன்னிப் பெண்களுக்கே முற்றிலும் உரிமையாய் எடுத்துக்கொள்ளக் கூடியதன்று! தங்கள் துணைவியாம் திருவாட்டி அன்வினைப் பார்த்தால் தங்களை மணம் செய்து கொண்டபின்பும் அதனால் இத்தன்மைகள் அவரிடமிருந்து விலகிவிடவில்லை என்பதனைக் காணலாம்.

உங்கள் எல்லாருக்கும் உங்கள் அன்னையார் அன்பு—அதனை இடைநின்றிடித்துக்கொண்டே என் சிறிய அன்பும் கூடவருகிறது.

தங்கள்

வி. கூ.

24. ஒரு விளக்கம்

[தூய திரு. ஜான் நியூட்டன் அவர்கட்கு]

ஜூலை 30, 1780.

அன்புடைப் பெரியீர்,

எனது கவிதை சார்பான ஏற்றுமதிகளையெல்லாம் திரு. அன்வினுக்குத்தான் தங்கு தடையின்றி அனுப்புகிறேன். தங்களுக்கு அனுப்பவில்லையென்று நீங்கள் கருதிக்கொண்டிருக்கக்கூடும். அங்ஙனம் கருதுவதற்கு இடமில்லையென்றும் நான் கூற முடியாது. ஆனால் உண்மையான காரணம் இது; நான் கையில் ஒரு யாழுடன் தெருக்களில் பாடப் புறப்பட்டால், அரச சபை உறுப்பினர் வீட்டு முன்போ முதன்மை நீதிபதி வீட்டு முன்போ நின்று பாட மாட்டேனல்லவா? இக்கேளிக்கைகளைப் பொழுதுபோக்காக விரும்பும் பொதுமக்களிடம் மட்டுந் தானே செல்லக்கூடும்! கவிதைத் துறையில் நான் செய்யும்

முயற்சிகள் மிகச் சிறுமை வாய்ந்த முயற்சிகளே. உங்களுக்கு அவை பொருத்தமான பரிசாகமாட்டா. திரு. அன்வினுக்கும் திரு. நியூட்டனுக்கும் இத்தகைய வேறு பாட்டை நான் கற்பிப்பிதுபற்றித் திரு. அன்வினிடம் கூறினால் கூட அவர் இதனை மறுக்கமாட்டார். திரு. நியூட்டன் ஏற்கெனவே ஒரு சமயத் துணைமுதல்வர் (அப்போஸ்தலர்) ஆய்விட்டார். திரு. அன்வின் அதற்குப் பயிற்சிபெறும் 'முட்டை' நிலையிலேயே யிருக்கிறார். முட்டை குஞ்சு பொரித்துத் தான் அவர் தங்கள் நிலையை அவாவ வேண்டும். என் கவிதை முழுமுதிர்ச்சியடைந்த பின், அல்லது இன்றைவிட மிகுதி முதிர்வுபெற்ற சமயம் ஹாக்டனிலுள்ள என் நண்பருக்கும் அவற்றை மிகுதியாக அனுப்புவேன். இப் புதிரை விளக்க நான் இவ்வளவு காலந் தாழ்த்தமைக்கும் இதுவே காரணம். ஆனால் தங்களை இது வரையில் சிந்திக்க வைத்து இது ஏதோ சரக்கை அருமைப் படுத்துவதற்கான சூழ்ச்சிநயம் என்று தாங்கள் நினைத்து விடப்படா தென்பதற்காக, இதோ என் தற்போதைய சரக்கின் ஒரு முனைமுகம்.

ஒரு விடுகதை *

இரண்டும் இரண்டும் ஒன்றுவேன்,
இயக்குவேன் வெப்பமும் தட்பமும் ;
முரணுவன் சாருவன் சட்டமே,
மொய்கடன் ஆற்றுவேன் மீறுவேன் ;
உறுபவர்க் கொருபொருளல்லன் நான்
உருதவர்க் கேவிலே யீடிலேன் ;
பெருதவர்க் கொருவரம், பெறிற்சிறு நாட்செயல்
பேறுபவர் பறித்திடத் தருவர்மன் உவந்தே !

வி. கூ.

---

* இவ்விடு கதையின் விடுவிப்பு முத்தம் என்பது.

25. கடிதமெழுதுதலும் உரையாடலும்

[தூய திரு. வில்லியம் அன்வின் அவர்கட்கு]

ஆகஸ்டு 6, 1780.

என் அருமை நண்ப,

என்னிடமிருந்து கடிதம் பெற நீங்கள் விரும்புகிறீர்கள். நான் எழுதுவதற்கு இது ஒரு நல்ல காரணமாயமைகிறது—ஆனால் எழுதுவதற்கு ஒன்றும் தோன்றவில்லை. எழுதாதற்கு இது அதே போன்ற ஒரு நல்ல காரணமாயமைகிறது. ஆயினும் நீங்கள் காலையில் உங்கள் குதிரை மீதேறி இங்கே வந்து இந்த நேரத்தில் (மாலை 5 மணிக்கு) என்னுடனிருந்தீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நான் உரையாடவே செய்யாமல் இருந்திருந்தால் நீங்கள் "திரு. கூப்பர், நான் வந்தது முதல் பேசாமலிருக்கிறீர்களே? இனி என்னுடன் பேசாமலே இருந்துவிட முடிவு செய்துவிட்டீர்களா?" என்று கேட்பீர்களல்லவா? அப்போது நான் பேசாமலிருப்பது பேசுவதற்கு ஒன்றுமில்லாததனால் என்று காரணம் கூறுவேனா? கூறினால்தான் ஒத்துவருமா? இதிலிருந்து கடிதம் எழுதும்போது நான் அடிக்கடி மறந்துவிடும் ஒரு நல்ல படிப்பினைமொழி நினைவிற்கு வருகிறது; செய்தி எதுவும் இருந்தாலும் கடிதம் எழுதலாம், இல்லாவிட்டாலும் கடிதம் எழுதலாம் என்பதே அது. காலத்தின் இருவகை கடிதத்தில் இருவகையாகும், அவ்வளவே! இருபது கல் தொலை நடந்து செல்ல வேண்டிய ஒருவன் புறப்படவேண்டுமா, வேண்டாமா என்று ஆராய்ந்து கொண்டிருப்பதில்லை. ஒவ்வொரு நொடியும் பயணத்தின் ஒரு படியாதலால் போய்ச் சேரும்வரை நடந்து கொண்டே யிருப்பான். இக்கடித வகையிலும்

இதுபோன்ற கடிதங்கள் வகையிலும் செய்தி இதுதான். உரையாடல் நடக்கும் முறையிலேயே அல்லது ஒரு பயணம் நடக்கும் முறையிலேயே கடிதமும் எழுதப் படுகிறது. ஆய்ந்தோய்ந்து பாராமலே ஒருவன் பேசக் கூடுமானல், ஏன் அதேபோல ஆய்ந்தோய்ந்து பாராமலே எழுதவும் கூடாது? 'குஞ்சிக் கொண்டையும்' 'யாளத்தாரும்' 'தலைப்பாகையும்' *—கொண்ட சென்ற நூற்றாண்டுப் பேர்வழிகள் திரும்பி வந்து நம்மிடம் பேசினல் "ஆய்ந்தோய்ந்து பாராமல் பேசவும் முடியாது; எழுதவும் முடியாது, ஐயனே" என்று கூறுவர். ஆனல் சென்ற நூற்றாண்டின் பழங்காலப் பஞ்சடைந்த கருத்துக் களுடன் இந்த நூற்றாண்டுக்கு எந்தத் தொடர்பும் இல்லா மலே இருக்கும் என்று நம்புகிறேன்........அவர்கள் தங்கள் ஆழ்ந்த சிந்தனையைத் தத்தம் கல்லறைகளிலிருந்து நூற்றாண்டுக் கணக்கில் சிந்தித்துக் கொள்ளட்டும். நம்மை நம் போக்கில் பேசும்படியும் எழுதும்படியும் விட்டுவிடட் டும். இல்லாவிட்டால் நாம் அவர்களைப் போல் இறந்தவர் களாயிராமல் உயிருள்ளவராயிருப்பதில் என்ன ஆதாயம்!

நம் முன்னோர்களை நாம் எண்ணி உருவகப்படுத்திப் பார்த்தால் அவர்கள் இதே இங்கிலாந்தில் இருந்தவர்களா யினும் அவர்கள் உண்மையில் வேருெரு தேசத்து மக்கள் போல—வேருெரு உலகத்து மக்கள் அல்லது வேருெருவகை பிராணிகள் போலக் கூடத் தோற்றுகிறார்கள்....அவர்கள்

* இப்பகுதி மொழிபெயர்க்க முடியாதது—18-ம் நூற்றாண்டில் எழுதும் ஆசிரியர் கூப்பர் 17-ம் நூற்றாண்டில் இங்கிலாந்தி லுள்ளவர் நடையுடையை இங்கே குறிப்பிடுகிறார். அக்கருத்தை இன்றையத் தமிழகச் சூழ்நிலையில் படம் பிடிப்பதனுலேயே அதே சுவையை ஓரளவு வருவிக்கலாகும்.

கட்டிட வகைகள், நடை உடை நிலைகள், கருத்துக்கள் எவற்றையும் பார்க்க அவர்களிடமிருந்தும் வளர்ச்சி யடைந்துள்ளோம் என்று நம்புவது அரிதாயிருக்கிறது. நமக்கும் அவர்கட்கும் உள்ள விருப்பு வெறுப்பு வேற்றுமைகளை நோக்க, வேறு செய்திகளில் ஒப்புமைகளிருந்தால் கூட, அது வியப்புக்குரியதாகவே தோற்றுகிறது. ஆயினும் உடை, வெளித்தோற்றம், புறக்கருத்துகள் ஆகியவற்றை நீக்கிப் பார்த்தால், அவர்களும் நாமும் மட்டுமல்ல, உலகத்தில் பல காலத்தில் பலதேசத்தில் உள்ள மக்கள் எல்லாருமே மனித அடிப்படையில் ஒரு நிலையாகவே இருக்கிறோம். உணர்ச்சியில் உலகெலாம் ஒன்றே. மனித உலகம் என்றென்றும் உணர்ச்சியில் ஒன்றே. காலமும் இடமும் வேறுபடுத்துவதெல்லாம் புறப்பகுதியையே. அகப் பகுதியை எதுவும் அசைப்பதில்லை. உணர்ச்சிமட்டுமன்று; உணவுநாட்டம், இன்பநாட்டம் முதலிய வாழ்க்கைக் குறிக்கோள்கள் எங்கும் என்றும் மாறுவதைக் காணோம். கூறவேண்டுமானால், நாகரிகம் முன்னேற முன்னேற நாம் இவற்றைப் புதுப்புது முறையில் மறைத்து வைக்க மட்டும் தான் பார்க்கிறோம். ஒளிப்பன்றி ஒழிப்புப்பற்றி யாரும் எண்ணுவது கிடையாது. அறிவு விளக்கக் கோட்பாடுகள், இலக்கியங்கள், கலைகள் ஆகியவை புறப்போர்வையில் மாறுபாடு உண்டு பண்ணுகின்றன. மற்றெவ்வகையில் பார்த்தாலும் நவநாகரிகன் என்பவன் ஒரு புதுப் போர்வைக்குள் மறைந்திருக்கும் பழங் கர் நாடகத் தானே.

வி. கூ..

26. தப்பியோடிய வெண்முயல்

[தூய திரு. ஜான் நியூட்டன் அவர்கட்கு]

ஆகஸ்ட், 21, 1780.

குறிப்பிடத் தக்க செய்திகள் எதுவும் நடைபெறாத இந்த இடத்தில் கீழ் வரும் நிகழ்ச்சியை என்னால் குறிக்காதிருக்க முடியவில்லை. சென்ற புதன் கிழமை இரவு சாப்பாட்டு நேரம். மணி எட்டுக்கும் ஒன்பதுக்கும் இடைப்பட்டதாயிருக்கும். பின் கட்டிலிருந்து ஏதோ ஓர் அரவம் கேட்டது. முயல்களில் ஒன்று எதிலோ சிக்கிக் கட்டவிழ்க்க முயன்று புரள்வது போலிருந்தது. ஐந்து கணங்களுக்குள் முன் கூடத்திலிருந்து ஒருவர் "ஐயா, உங்கள் முயலுள் ஒன்று தப்பி ஓடுவது போலில்லையா?" என்று கேட்டார். உடனே பின்னறைக்குள் ஓடோடியும் சென்று பார்த்தேன். எனது வெண்முயல் 'பூசி' தப்பி யோடி விட்டதென்பதை உணர்ந்தேன். பலகணியைத் திறந்து வைத்துக் காற்றுக்காகத் திரையிட்டுக் கட்டியிருந் தோம். இச் சிற்றுயிரினங்களுக்கு இப்போது காப்புப் போதும் என்று நினைத்தோம். ஆனால் 'பூசி' அக் கட்டைப் பல்வால் அறுத்துத்தள்ளி வெளியோடியிருக்கிறது.

சமையற்கட்டில் சமையலாள் அப்போதுதான் பூசி ஓடிவிட்டதென்றும் அவன் பிடிக்க ஓடியும் முடியவில்லை யென்றும் கூறினான். வேறு சிலர் பிடிக்கு முன் அது நழுவித் தலைக்குமேல் துள்ளி யோடிற்று என்று சொன்னார் கள். சமயற்காரனை எப்படியும் சென்று தேடும்படி கூறிய துடன் அவனைவிட ஒல்லியான உடலுடைய மற்றொரு வேலையாளையும் விரைந்தோடவிட்டேன்.

பூசியைப்பற்றிய செய்தியை அறிய ஒரு மணி நேரம் சென்றது. இரண்டாவது சென்ற வேலையாள் ஊர் நடுவில் ஒரு பேரிரைச்சல் கேட்டு அப்பக்கம் நோக்க, பூசியைத் தொடர்ந்து நாய்களும் மனிதர்களும் பிள்ளைகளும் துரத்திக்கொண்டிருப்பது கண்டான். அவர்கள் கையில் பூசி சிக்கக்கூடாதே என்று அவர்களையும் கடந்துசென்றான். மற்றவர்கள் பின் தங்கி விட்டனர்.

ஊரெல்லை கடந்து பூசி டிராப் ஷார்ட் என்ற அயலூர் செல்லும் பாதையில் ஓடத்தொடங்கிற்று. இனி எளிதில் பிடித்துவிடமுடியும் என்று எண்ணுவதற்குள் அது திரும்பி வேலையாளைக் கடந்து ஊருக்குட்புகுந்தது. இத்தடவை அது சாயக்காரன் திரு. வாக்ஸ்டாஃப் தொழிற்களத்துக்குள் சென்றது. அங்கே எல்லாரும் உணவு மேடையிலிருந்தனர். அவர்களிடையே செல்ல அஞ்சி திரும்பவும்வேலையாள் கைக்கும் வரவிரும்பாமல் பூசி சாயத் தொட்டிகளைக்கடந்து செல்ல நினைத்து முதல் தொட்டியில் சாடிற்று. அதனைப் கடந்தபின் இரண்டாம் தொட்டியில் விழுந்து தத்தளித்தது. இச் சமையம் பணியாள் ஒருவன் வந்து அதைத் தூக்கிவிடாவிட்டால் அது மூழ்கி இறந்தே போயிருக்கும். வேளையாள் பணிப்பையனிடமிருந்து அதை வாங்கித் தூய நீர்த்தொட்டியில் அலம்பி அதன் உடலில் படிந்துள்ள சாயத்தையும் சுண்ணக் கலவையையும் அகற்றினான். இதன் பின் அதன் உடல் தேறும்படி சாக்குகளிடையே வைத்து தணல் வெதுப்பி னருகில் அதை இட்டுக் களை உண்டு பண்ணினோம்.

பூசியின் இம் மூளையற்ற குறும்பினால் எனக்கு நான்கு வெள்ளிகள் நட்டம். ஆனால் வெள்ளியைப்பற்றிய கவலை

எனக்கு இல்லை. என்றுமறியா இவ்வேழை உயிரினத்துக்கு என் கவனக் குறைவால் சிறிது ஊறு நேர்ந்துவிட்டது. காதில் கொஞ்சமும் கால் நகங்களுள் ஒன்றும் ஊறுபட்டன. ஆனால் இக் கடிதம் எழுதும் நேரத்தில் அதுவும் ஆறி விட்டது......

தங்கள்,

வி. கூ.

27. காலத்தின் செயல்—ஆக்கமும் அழிவும்

[திருவாட்டி கூப்பர் அவர்கட்கு,
பார்க் தெரு, கிராஸ்வெனர் கட்டம்]

ஆகஸ்டு 31, 1780.

என் அருமை மைத்துனியீர்,

........நான் முன்பு பழகும்போது முதியவர்களாயிருந்த நண்பர்கள் இன்னும் முதியவர்களாகவே இருக்கிறார்கள். இதில் எனக்கு அதிர்ச்சி எதுவும் இல்லை. ஆனால் முன்பு இளமையுடையவர்களாயிருந்து இன்று முதுமை பெற்றுள்ளவர்களைக் காண எனக்கு நிரம்ப அதிர்ச்சியாகவே இருக்கிறது. காலம் அவர்கள் உருவில் செய்துள்ள மாறுபாடுகளைப் படிப்படியாகக் காணும் வாய்ப்பு இருந்திருந்தால் என் மனத்திலுள்ள அவர்கள் படிவமும் அதற்கிசைய மாறுபட்டுக் கொண்டே வந்திருக்கும். அத்தகைய திருத்தம் நெடுநாள் இல்லாத காரணத்தால் பழயபடிவமே மனத்தில் படிந்திருக்கிறது........உங்கள் தோற்றத்திலும் காலம் என்ன மாறுதல்கள் செய்திருக்கக்கூடும் என்பதை நான் அறியமாட்டேன். ஏனெனில் சிலர் முகத்தில் அதன் கால் நகங்கள் (முன்னோர்கள் அதற்கும் உருவம் கொடுத்து

விட்டார்கள் !) ஆழ்ந்த கோடுகளிடும்; சிலர் முகங்களைத் தின்டாதுவிட்டுவிடும். ஆனால் உடல் பற்றிய வகையில் காலத்தின் செயல் எதுவாயினும், உள வகையில் அது எப்போதும் நண்பன் செயலாகவே இருக்கிறது. தங்களுக்கும் அது நண்பனாகவே இருக்கிறதென்பதை நேரடியாகப் பார்க்காமலே அறிகிறேன். இவ்வுள்ளத்தின் வகையில் காலம் பொதுவாக நண்பனாயினும், அதன் நட்புச் செயல் ஓரளவு நம்மையே பொறுத்தது. நலங்குறைந்த இடததில் அது மிகுதி பெருகுவதில்லை. நாம் அதன் நட்பை மதித்து அதன் படிப்பினைகளுக்குச் செவிசாய்த்தால் நமக்கு நிறைவுண்டு. அல்லாவிட்டால் நாம் குறைபடுவோம். என்றும் காலத்தின் படிப்பினைகளுக்குச் செவி சாய்க்காதவர்கள் வகையில் காலம் ஓரளவு பகைவன் என்று கூடக் கூறலாம். ஏனெனில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பகுதியாக அவன் நம் நயங்களைக் குறைத்துக் கொண்டிருப்பான். தங்களைப்போல வாழ்க்கைக் குன்றினுச்சி வந்து நின்று, பின்னோக்கி வாழ்க்கை யின்பங்கண்டு மகிழ்ந்தும், கட்டுப்பாடும் எல்லையுமற்ற பரந்த காலவெளியின் நிறைவு நோக்கி ஒளி பெற்றும் வாழ்கின்றவர் வகையில் காலம் ஒரு நண்பனாக மட்டுமன்றி ஒப்பற்ற துணைவனாகவும் தோழனாகவும் விளங்குகிறான். இன்னும் சில நாளில் தங்கள் அவா முழுமையும் காலத்துடன் காலமாகக் கலந்து நிறைவுறலாம்.

தங்கள்

வி. கூ.

28. சிறுவர் கல்வி

[தூய திரு. வில்லியம் அன்வின் அவர்கட்கு]

செப்டம்பர் 7, 1780.

என் அரிய நண்பரீரி,

உலகில் சிறுவர் சிறுமியர்களைப் பெற்ற செல்வர்கள் எத்தனை பேரோ, அவர்களிடையே சிந்திக்கும் ஆற்றல் வாய்ந்த மூளையுடையவர் எத்தனை பேரோ அத்தனை வகையான கோட்பாடுகளும் சிறுவர் கல்வி வகையில் ஏற்பட்டுள்ளன. அவை யாவும் அறிவும் அனுபவமும் வாய்ந்தவையே! ஆயினும் யாவும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாகவே உள்ளன. சிறுவர்களைப் பற்றிய மட்டில் என் கருத்து அவர்கட்கு மிகமிக இளமையிலேயே கிரீக்கும் இலத்தீனும் திணிக்கப்பட்டு அவர்களுக்குக் கேடு விளைக்கப்படுகிறது என்பதே. பிறர் எவரும் அம்மொழிகளைச் சிறிதும் அறியாத வயதிலேயே அவற்றைத் தம் பிள்ளைகள் கற்றறிந்து திறனடைந்து விடுவதால் பெற்றோர் மகிழ்ச்சியடைகின்றனர் என்பது இயல்பே. ஆனால் இதனால் ஒரு எதிர்பாரா விளைவு ஏற்படுகிறது. ஏழு எட்டு வயதுகளில் ஈஸப்பின் சிங்கம் சுண்டெலி முதலியவற்றின் கதைகள் படிக்கும் பையன் விரைவில் அத்தகைய கதைகளில் சலிப்பெய்தியபின் அறிவு நூல்களில் கவனம் செலுத்த முடிகிறது. அதே வயதிற்குள் கிரீக்கும் இலத்தீனும் *படிப்

* மேனாடுகளில் உயர் குடியினர் இலத்தீனும் கிரீக்கும் புலமைக்காகவும் பிரஞ்சு மொழியை நாகரிகத்துக்காகவும் கற்றல் வழக்கம். குடியுயர்வுக்கும் பதவியுயர்வுக்கும் உதவும் இம்மொழிகளில் அவர்கள் பெருக்கம் காட்டியதில் வியப்பில்லை. ஐரோப்பியத் தாய் மொழிகள் உயர்வடைய உயர்வடைய இவ் வழக்கம் குறைந்தே வருகிறது.

பவன் அப்படிப்பிலேயே சலிப்பெய்திவிடுகிருன். இதன் பின் அவன் உள்ள வளர்ச்சி இதனுல் தடைபடுகிறது.

உள்ளம், உடல் ஆகிய இரண்டின் வளர்ச்சிப் படிகளி லும் பெரிதளவு ஒற்றுமை உண்டு. சிறுமையில் இரண்டும் ஊக்கமும் விரைவும் குழைவும் உடையவை. அவை ஓடி யாடித் திரியும்; ஆனல் வலிமையும் உரமும் அவற்றில் கிடையாது. கடுமையான உழைப்பு இப் பருவத்தில் உடலை யும் கெடுத்துவிடும்; உள்ளத்தையும் கெடுத்துவிடும். முதிர் வயதிலோ உடலும் உளனும் விரைவும் குழைவும் இழக்கின்றன. ஆனல் உரமும் விரைவும் உழைப்பாற்றலும் மிகுதியாகின்றன. சிறுவர் ஒரு தொழிலில் ஒரு சிறிது நேரமே ஈடுபட்டிருக்க முடியும். முதிர்ந்தவர் ஒரே தொழி லில் நீண்ட நேரம் விடாதுழைக்கவும் கடும் உழைப்புச் செய்யவும் முடியும். இத்தகைய உழைப்புச் சிறுமையில் தரப்பட்டால் பொறுக்க முடியாத களைப்பால் உடலும் உள்ளமும் செயலற்று வளர்ச்சி தடைப்பட்டுவிடும்.

தங்கள் பிள்ளையின் கல்வி வகையில் தங்கள் வாய்ப்பும் நலனும் தாங்களே நன்கு அறிபவர்கள். ஆயினும் என்னைப் பொறுத்தவரை நான் கூறும் அறிவுரை வருகிற இரண் டாண்டுகளுக்கும் நம் சிறுவன் ஜானுக்கு எழுத்தும் எண்ணும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே. அவற்றுடன் சிறிது பல்வகை மாறுபாடு வரு விக்கவும் இன்பப் பொழுது போக்குடன் இணையவும் உதவும் முறையில் அறிவியல்களுள் ஒன்றுன சில நூலும் கற்பிக்கலாம் என்று எண்ணுகிறேன். தற்போது இந் நூலறிவு கல்வியில் சிறிதும் இடம் பெருதது குறிப்பிடத் தக்கது. ஆனல் ஒரு பண்பட்ட செல்வனின் கல்வித்

திறத்துக்கு (என் அனுபவத்தையே கூறுகிறேன்) அது இன்றியமையாதது. ஸ்பென்ஸர் பெருமகனாரின் சிறுவனுக்கு அவன் நான்கு வயதாயிருக்கும்போதே ஒவ்வொரு நாடு, மலை, ஆறு, நகரம் ஆகியவற்றின் அமைப்பிடங்கள் மிகத் தெளிவாகத் தெரிந்திருந்தனவாம். இது அவனுக்கு தெரிந்த வகை வியப்புக்குரியது. ஏனெனில், அவன் தந்தை அவனுக்கு நிலநூல் கற்பிக்கவேயில்லை. ஆனால் அவனுக்கு விளையாட்டுக் கற்பித்தார் உலகப்படமொன்றை நாடு நாடாகக் கத்தரித்துக் கொடுத்துப் பொருத்திச் சேர்க்கும் இனிய விளையாட்டை அவர் அவனுக்குக் கற்பித்திருந்தார். இங்ஙனம் பொருத்தியதால் அவனுக்கு நிலநூல் அறிவு விளையாட்டுடன் விளையாட்டாகவே ஏற்பட்டுவிட்டது.

இலத்தீனும் கிரீக்கும் எட்டு அல்லது ஒன்பது வயதுக்குமேல் படித்தால் போதுமென்று எண்ணுகிறேன். அவற்றின் பயிற்சிக்கு வழக்கமாக ஏழு ஆண்டுகள் போதும். பதினைந்து வயதுக்குள் எவரும் பல்கலைக் கழகத்தில் நுழைவு பெறமுடியாது. என் கருத்தில் பதினைந்துகூடப் பல்கலைக் கழக நுழைவுக்குப் போதிய வயதன்று. அவ் வயது அவ்வாழ்வில் அவர்கள் தங்கள் ஒழுக்கத்தைத் தன் மதிப்புடன் காத்துக் கொள்ளவும் போதியதன்று. ஜானைப் போன்ற அறிவு நுட்பமுடைய சிறுவன் திறத்தைத் தூண்டுவதைவிட நேரிய வழியில் செல்லும் வகையில் அதனை அடக்கிவைப்பதே அறிவுடைய செயல் என்று நான் கருதுவதை நீங்கள் கண்டுகொண்டிருப்பீர்கள். ஆகவே வருகிற இரண்டாண்டுகளுக்கு (கிரேக்க இலத்தீன) இலக்கணப் புத்தகங்களை அவனிடம் கொடுப்பதைவிட இன்னும் ஓராண்டாவது பொழுது போக்கும் சிற்றிலக்கிய நூல்கள், இயற்கையறிவு விளக்க நூல்கள் ஆகியவற்றை அவனுக்குத்

தருவித்தலே நலமாகும் என்று எண்ணுகிறேன். சிறுவர் உலக அறிவு நூல் (Cosmo-theoria Puerilis) டெர்ஹாமின் பொருளியல் வானியல் விளக்க நூல் (Physico-astro theology) போன்ற சிறுவர்கட்கு எளிதில் விளங்கக் கூடிய நன்னூல்கள் பல உள்ளன.

மாங்கனி வருக்கைக் கனிகள் *வரும் கடிதத்தில்!

வி. கூ.

29. சட்ட வழக்கறிவிப்புக்களும் கவிதையும்

[இதுவுமது]

டிஸம்பர் 1780,

என் அரிய நண்ப,

பொதுவாகச் சட்டத் துறை வழக்குகள் கவிதை வடிவில் ஆக்கப்படுவதில்லை. ஆயினும் அப்படி ஆக்கப்படுவது மிகவும் நன்று என்றே நினைக்கிறேன். இதனால் எத்தனையோ நன்மைகள் ஏற்படும். முதன்முதலாக நாம் அவற்றை நம் நினைவுப்பெட்டகத்தில் எளிதாக அடைத்து வைக்கலாம். துணிமணிகளைத் திணித்துவைப்பதைவிட மடித்தழுத்தி மிகுதியாகப் புகுத்தி வைக்க முடியுமல்லவா? அது போலப் பாடலுருவில் ஒழுங்குபடுத்தப்பட்ட சட்ட வழக்குகள் பல நம் சிறு மூளையுள் இடம் பெறுவது எளிது. ஆடையணிகளின் வளைவு நெளிவுகள், மூலை முடிச்சுக்கள், கோணல்மாணல்கள் இம்மடிப்பில் ஒன்றுட

* ஆங்கில நூலுரை Plums and pears என்பது. இவை இலந்தை, பேரிக் கனிகள் போன்றவை.

ஞென்று பொருந்தி வீணிடமடைக்காமல் அமைவது போலவே, சட்டத்தின் மொழி நடையில் பொதுவாகக் காணப்படும் சுற்றுரையும் வளைந்து வளைந்து வரும் வெற்று ரையும் மூச்சுவிட முடியாது தொடுத்து வரும் நீட்டுரையும் தலையும் வாலும் உடலும் அறிய முடியாது குழைந்து குழைந்து செல்லும் சிக்குரையும் யாவும் பொருள் விளக்கத் துக்கெனவே ஏற்பட்டாலும் அவற்றின் உருவம் காரணமாக பொருட் குழப்பத்தையே உண்டு பண்ணுகின்றன. பாட்டில் இவை யாவும் அழகிணைப்புக்களாக அமைந்து மோனை எதுகைகள் மூலம் முடிவுகாட்டி, விளக்கம் பெறும். கடைசியாக, வழக்கு மன்றத்தில் அவற்றை எடுத்து மேற்கோள் காட்டும்போது அவற்றால் விளக்கம் பெற வேண்டுபவரும் காட்சியாளரும் மட்டுமின்றி அவற்றைக் கவனித்துத் தீர்ப்பளிக்க வேண்டிய மன்றத்தலைவரும்கூட அவற்றைக் கவனிக்க முடியாமல் அவற்றின் ஆரவாரத்திடையே தூங்கத் தொடங்கி விடுகின்றனரன்றோ! பாட்டின் இசைப் பண்புடன் அவை இசைந்துவிட்டால் காட்சியாளருக்கும் துன்பம் மட்டாகும். மன்றத்தலைவர் அவற்றின் ஆரவாரத் திடையே சிறிது பொருள் காணவும் கூடும். அவற்றால் ஏற்படும் மனச்சடைவும் உவர்ப்பும் நீங்கும். நமது சட்டத் துறையிலுள்ள பார உணர்ச்சியும் தூங்குமூஞ்சிச் சடைவும் இதனால் சிறிதளவாவது குறைபட வழி ஏற்படும்.

என் உறவினருள் ஒருவர் இளமையிலேயே சட்டப் பயிற்சியில் முனைந்தவராயிருந்தார். சில ஆண்டுகட்டு முன் அவர் உண்மையிலேயே தம் சட்ட அறிவைக் கவிதையாக எழுதுவதில் ஈடுபட்டார். முதன் முதலில் அவர் ‘கோக்’

சட்ட மூலங்களை (Coke's Institutes) எடுத்துக் கொண்டார். நான் மேலே குறிப்பிட்டது போன்ற காரணங்களே அவரையும் இவ்வகையில் தூண்டியிருக்க வேண்டும். அதன் கரடு முரடான நடையை பாட்டாகச் செப்பம் செய்வது ஒரு பகீரத வேலையாகவே இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை. உண்மையில் இது முள்ளெலியின் முதுகிலுள்ள முட்களை வெண் முயலின் வெண் மயிர் போலக் குழைவாக்கும் வேலையை ஒத்ததேயாகும். ஆனால் இத் துறையில் அவர் அடைந்த வெற்றி அபாரமானதும் மிகவும் வியப்பளிக்கத்தக்கதுமேயாகும். அதற்குச் சான்ருக, அவர் மறந்த பகுதி போக இன்னும் நினைவில் வைத்துக் கொண்டிருக்கும் கீழ் வரும் அடிகளைக் குறிக்கிறேன்.

தன் நிலத்துழைக்கும் தாளாளன்
தடையின்றி நலம்பெறும் வேளாளன் :
யாருக்கும் கும்பிட்டு வாழ வேண்டாம்
எவரையும் அஞ்சித் தாழ வேண்டாம்
தனக்கெனக் காணி நிலமுண்டு
தண்டுதடங்க லெதுவு மில்லை
தலைமுறை தலைமுறை யெந்நாளும்
*தனது சிற்றரசினை அவனாளும்.**

இங்ஙனம் பாட்டாக்கப் பெற்ற இம்முறையின் செம்மைகளை உங்களுக்கு நான் எடுத்துக் கூறவேண்டுவதில்லை; கவிதையிலுள்ள தங்கள் ஆர்வமும் இன்னிசை

---

* Tenlent in fee
Simple is he,
And need never quake nor quiver
Who hath his lands
Free from all demands
To him and his heirs for ever.

நயமுணரும் தங்கள் செவிகளுமே இதனைத் தங்களுக்கு உணர்த்தும். எனவே இம் முன்னுரையை விடுத்து நான் இக் கடிதத்தில் கூறவந்த வழக்கு விவரத்தை உங்கட்குத் தனியாக அனுப்புகிறேன். அதற்கு ஒரு முன்னுருக்க மாகவே இக் கருத்துக்களை இங்கே தந்துள்ளேன்........*

30. கவிதை எழுதுவது ஏன்?

[இதுவுமது]

மார்ச் 18, 1781.

என் அருமை நண்பரீர்.

என் இடது கண்ணில் சிறிது நோவு இருப்பதனால் இக் கடிதம் நெடுநீளமாயிருக்க முடியாதென்று அஞ்சு கிறேன். இதை எழுதாமலே அது தடுத்துவிட்டிருக்கக் கூட இடமுண்டு. ஆனால் ஒரு வாரத்துக்கு மேல் கடித மில்லாமலிருக்க நீங்கள் வருந்துவீர்களென்பதை நான் அறிவேன்.

கவிஞர்களை யெல்லாம் அழைத்து நீங்கள் ஏன் கவிதை நூல்கள் வெளியிடுகிறீர்கள் என்று கேட்க ஒரு விசாரணைக்குழு அமைக்கப்பட்டதாக வைத்துக் கொள் வோம். மற்றக் கவிஞர்கள் கூறத் துணியாத இம் மறு மொழியை நான் கூறக்கூடும். கவிதையினால் ஏதாவது ஊதியம் வருமானால் வரட்டும். அதைப்பற்றி எனக்குத் தடை எதுவும் இல்லை. ஆனால் அது என் நோக்கமன்று. அப்படியானால் உலக மக்கள் முன் நான் ஒரு அருங்

* இவ்விடத்தில் "வாதி-மூக்கு; கண்கள்.எதிர்வாதிகள்" என்ற வழக்குக் கவிதை வடிவில் எழுதியனுப்பப்பட்டிருந்ததாக அறிகிறோம்.

கவிதையாற்றல் படைத்தவன் என்பதைக் காட்டிக் கொள்ள விரும்புகிறேனு என்ருல், அதுவுமன்று. அப்படியானல் உன் நோக்கந்தான் என்னவாயிருக்கக்கூடும் என்று குழுவின் தலைவர் கட்டாயமாகக் கேட்பார். நான் உடனே அவருக்குத் தலைவணங்கி, ஒரு சொல்லில் 'நேரப் போக்குக்காகவே' என்று கூறுவேன் வேறென்று மன்று, இதுதான் என் குறுகிய எல்லைக்குள் இது தவிர வேறு எத் தொழிலும் கிடைக்கவில்லை. கவிதை ஒன்று நீங்கலாக, வேலையில்லாத நேரத்தில் என் உள்ளத்தில் வந்து குழுமிவரும் கவலை தரும் எண்ணங்களை அகற்றத்தக்க வேறு எந்த வகையையும் நான் காண முடியவில்லை. சரி, இதற்காகக் கவிதை எழுதுவது சரி; அதை வெளியிடுவானேன் என்ருல், அதை வெளியிட்டால்தானே அதன் வெற்றிக்காக முயற்சி செய்கிறேன் என்ற கருத்து உண்டாகி அதனல் எனக்கு மனநிறைவும் நேரப் போக்கும் உண்டாகும்! இதுவே நான் கூறும் காரணமாயிருக்கும்........

என் அரிய நண்பா, தங்கள்
வி. கூப்பர்.

31. கவிதை வெளியீடு

[இதுவுமது]

மே 1, 1781.

நான் கடிதம் எழுதித் தீரவேண்டும் என்று சாதிக்கிருர் உங்கள் அன்னையார்! தீரவேண்டும் என்ற சொல்லுக்கு மேல் ஏதாவது எதிர்ப் பேச்சு உண்டா? அச்சொல் இல்லாவிட்டால் பொதுவாக நான் தெரிவிக்க எதுவும் இல்லை.

எனக்கு மிகவும் சடைவாயிருக்கிறது, களைப்படைந்திருக்கிறேன் என்று பல சில சாக்குப் போக்குகள் கூறிப் பார்க்கலாம். உங்களுக்கும் அப்போது தொந்தரவு குறைவாயிருக்கும். ஆனால் ஒரு பெருமாட்டி நீங்கள் செய்து தீரவேண்டும் என்று கூறும்போது இந்த நியாயங்களோ வேறு எந்த நியாயங்களோகூட அல்லது காரணங்களோ, அவசியங்களோ, சமய சந்தர்ப்பங்களோ கவைக்கு நிற்குமா? ஆனால் இன்னும் நீங்கள் தப்ப ஒரு வழியுண்டு. நான் தான் எழுத வேண்டும், தவிர்க்க முடியாது. நீங்கள் வாசித்துத் தீரவேண்டும் என்பதில்லையே. நீங்கள் வாசிக்கலாம், அல்லது வாசியாமலிருக்கலாம். ஆனால் அங்கும் உங்களருகிலிருக்கும் அன்பின் பெருமாட்டி இதேபோல நீங்கள் வாசித்துத் தீரவேண்டும் என்று ஆணையிட்டால், நீங்கள் வேறு போக்கில்லாமல் பழங்காலத்து வீரரைப் போல் பெண்டிர் ஆணைகடவாது நடந்து தீரவேண்டியதுதான்!

யாழில் எனக்கு நல்லிசை தராதவை என நான் எண்ணும் நரம்புகளை நான் தொட்டுமீட்ட விரும்பவே மாட்டேன். ஆனால் பிறருக்கு உதவும் செயலென்றால், நீங்கள் உங்கள் விருப்பு வெருப்புக்களை எண்ணிப்பார்ப்பவர்களல்ல என்பதும் எனக்குத் தெரியும். இவ்வெண்ணங்களால் சற்றுத் தேற்றங் கொண்டு நீங்கள் குறிப்பிடாமலே வாளா இருந்து வரும் ஒரு செய்தி பற்றிச் சற்றுக் கிளற எண்ணுகிறேன்—அதனால் நீங்கள் எண்ணுவதை விட மிகுதிப்பேர் தாக்கப்பட்டுள்ளார்கள். ஆடை பழமை பட்டுக் கந்தலாகப் பெற்ற சிறுவன் மட்டுமின்றி, அவன் தாயாரும் அதனால் மனமுளைகின்றனர். அவள் தானாக அவனுக்குப் புதிய ஆடைதர விரும்பவில்லை—விரும்பினால்

ஒரு நீண்ட தரவணியைத்தான் கொடுக்க வேண்டிய தாகும்.

இங்கே அச்சகத்தில் மூன்று வெள்ளி விலையிட்டு எட்டுமடிப்பு எட்டுருவில் இன்னம் டெம்பிளைச் சார்ந்த வில்லியம் கூப்பர் அவர்களால் இயற்றப்பட்ட "கவிதைகள்" என்ற நூல் விரைவில் வெளியிடப்படும் நிலையில் இருந்து வருகிறது. அதன் அளவைக் கேட்டவுடனே அதன் பெரும் பகுதி உங்களிடம் தெரிவிக்கப்படாமல் நெடுநாள் மறைவாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் உண்மை என்னவென்றால், உங்களிடம் இருக்கும் பகுதிபோக, மற்றவையெல்லாம் சென்ற குளிர் பருவத்தில் எழுதப்பட்டவை யென்பதே. நூலின் மூன்றிலொரு பங்கு நான்கு கவிதைகளாலானது. முதலது டிஸம்பர்த் திங்களிலும் கடைசியது மார்ச் திங்களிலும் தொடங்கப் பெற்றன. அவையனைத்தும் சேர்த்து இரண்டாயிரத்தைந்நூறு அடிகளுடையது. அவைகளுக்கிடப்பட்ட அல்லது இனி இடப்படக் கூடும் பெயர்கள் மேடைப்பலகைப் பேச்சு, பிழைபாட்டின் வளர்ச்சி, வாய்மை, வாத எதிர் வாதம்* என்பனவைகளே. திரு. நியூட்டன் அதற்கு முன்னுரை எழுதுகிறார்; திரு. ஜான்ஸன் அதை வெளியிடுகிறார். இப்போது உலகனைத்தும் அறியும்படி (திருவாளர் 'உலகனைத்தும்' அதை அறிய விரும்பக் கூடுமேயானால்) நான் தெரிவிக்கவிருக்கும் செய்தியை உங்களுக்கு இது வரை தெரிவியாதிருந்ததன் காரணம் என்னவென்றால், அது இதுவே—சில நாளைக்கு முன் வரை அதனை அறியும்

* Table Talk, Progress of Error, Truth, Expostulation

பேறு எனக்கும் கிடைக்கவில்லை யென்பது தான்! இது உங்களுக்குப் புதிதாகத் தோற்றலாம். ஆனால் இது உண்மை. என் திறத்தை நம்பி அதனை இடர்காப்* பின்றி வெளியிட விரும்பவில்லை. என் பொருள் கொண்டு காப்புச் செய்யவோ என் பணப்பை இடம் தரவில்லை. அதற்கான காப்புச் செய்துதரும் காப்பு உத்தரவாதக்காரர்† எவரையும் கண்டு கொள்ள முடியாமையால், விற்பனைக் களத்தில் அது விலைப் போகு மென்றறியாது எந்தப் புத்தகவிற்பனையாளர் துணிவுடன் அதனை மேற்கொள்ளப் போகிறார்கள் என்றிருந்தேன். ஆனால் இப்போது ஜான்ஸன் துணிந்து எல்லா இடர்களையும் தாமே தம் தலைமீதேற்றுக் கொள்வதாக முன்வந்துள்ளார். ஆகவேதான் நான் உலக மேடையில் ஏறுகிறேன். எனது வின்ஸன்ட் பூர்ணின் மொழி பெயர்ப்புக்கு உங்கள் அடுத்த பொற்காசை அனுப்புவீர்க ளென்றுநம்புகிறேன். எனது கவிதையஞ்செல்வி வெளி வந்த வுடன் தானே உங்கள் காலடியில் விழப்போகிறாள்.

தங்கள்

வி. கூ.

32. பெண்டிர் பாராட்டும் மதிப்புரையும்

[இதுவுமது]

ஜூன் 5, 1781.

என் அரு. நண்ப,

விரைந்து கொடுப்பது இருமடங்கு கொடுப்பதற் கொப்பாகும் என்பது பழஞ்சொல். அப்படியானால் விரைந்து கொடுப்பதுடனில்லாது கேட்டதற்கும் மிகுதி

* † Insurance + under-writers market

யாகக் கொடுப்பது மும்மடங்கு கொடுப்பதுடனொக்கும் என்று கூறவேண்டும். இப்போது திரு. ஸ்மித் செய்யும் உதவி இத்திறத்தது. அவர் ஜான்ஸனுக்குக் கொடுப்பதற் கான பொற்காசுகளை மட்டுமன்றி உங்களுக்குக் கொடுக்கும்படியாகத் தனி மடக்கில் வைத்து ஆறு பொற் காசுகள் வேருக அனுப்பியுள்ளார். உங்கள் கடிதத்தை நான் பார்த்தவரை இது அவராகச் செய்த பெருந்தன்மைச் செயலாகவே தோற்றுகிறது. நீங்கள் இதற்கான நன்றி யைத் தெரிவிக்கும்போது அவ்வகையில் என் பங்கை மறந்து விடாதேயுங்கள். அப்பொற் காசுகள் என் கவிதைகள் மூலமே சரிசெய்யப்பட வேண்டியவை என்பதை நோக்க, அது எனக்கு மிகவும் தற்பெருமை யளிப்பதாகக்கூட இருக்கிறது. அது வகையிலுள்ள என் மிகுதிப்படிக் கடப்பாட்டுணர்ச்சியையும் அவருக்குக் கட்டாயம் தெரி வியுங்கள். அவர்கள் மதிப்பையோ, முதன்முதலாக எனக்கு உதவிசெய்து அக்கவிதைகளை மதித்துக் காட்டிய தங்கள் நல்லெண்ணத்தையோ எவ்வகையிலும் நான் இழந்துவிட விரும்பவில்லை.

உங்கள் அன்னையார் கூறுகிருர்: இக் கவிதைகளில் எல்லாரும் ஒத்துக் கொள்வார்களென்று கூற முடியாத பல கருத்துக்களிருந்த போதிலும் குறைந்தது இதனை யேனும் உலக மக்கள் ஒத்துக் கொள்வார்கள்—எதனை யென்று அவர்கள் கூறினார்களென்ருல்,—அதை இங்கே எழுத என் வினயம் இடந்தரவில்லை! அவர் மதிப்புரைகள் பற்றி எனக்கு மிக உயர்ந்த எண்ணமுண்டு. அவற்றின் உறுதி பற்றிய அனுபவத்தின் பயனுக அவை என் நன் மதிப்புக்கும் கவனத்துக்கும் உரியவையாய் விட்டன. ஆயினும் அவர்கள் பாராட்டால் எனக்குத் தற்பெருமை

தோன்றவில்லை என்று கூறுவதும் மேற்குறிப்பிட்ட கருத்துக்கு முரண்பட்டதே. ஆனால் இதனிலும் சிறந்த ஒரு பலனை அது எனக்குத் தந்துள்ளது. அதுவே என் முயற்சிக்கும் விடாமுயற்சிக்கும் ஒரு தூண்டுதல்; என் சோர்வகற்றும் ஒரு ஊக்க மருந்து. இவ்விரண்டும் சேர்ந்து நான் அவர்கள் எதிர்பார்க்கும் தகுதிக்குரியவனாயிராவிட்டாலும்கூட அதில் மிகுதி குறைபடாமலிருக்கும்படி என்னை எச்சரிக்கின்றன. ஏனெனில் என் திறமையின்மையால் அறிவிலி என்ற பெயர் எனக்கு வந்துவிட்டால், இவ்விகழ்ச்சியால் நான் புண்படுவதினும் மிகுதியாக அவர்கள் புண்படநேரும். நூலாசிரியர் என்ற முறையிலோ தனி மனிதன் என்ற முறையிலோ நான் சொரணையற்றவனல்லவாயினும், இத்தகைய ஓர் அவா இல்லாவிட்டால், அத் தகுதி எனக்கு இன்னும் எட்டமுடியாத ஒன்றாகவே ஆகியிருக்கக்கூடும். என் வாழ்க்கையில் மன முறிவுகளும் ஏமாற்றங்களும் பல தடவை ஏற்பட்டிருப்பதன் காரணமாக என் உணர்ச்சிகள் பல வகையில் முனை மழுங்கியிருக்கக் கூடும். எனவே சில செய்திகளில் என் உணர்ச்சி யாற்றலும் இழிவச்சமும் குறைபட்டிருக்க இடமுண்டு. அது காரணமாக நான் என் தனிப்பட்ட பங்கில்வரும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டிருக்கக் கூடியவனாய் இருந்தாலும், என் நண்பர்கள் அவமதிப்புப் பெறுவதை அதே மாதிரி பார்த்துக் கொண்டிருக்க முடியாதல்லவா?

வி. சு.

33. முற்றெதுகை வாய்ந்த கடிதம்

[தூய திரு ஜான் நியூட்டன் அவர்கட்கு]

ஜூலை 12, 1781,

எனது மனதுக்கினிய
பண்பமை நண்ப,*

இதுகைப் பெறும்போது, எதுகை முற்றும் ஓடும் மதுகையினைக் காண்க. இதன் நிலை கண்டு தலை சொரிந்து இது பாட்டுரையோ நீட்டுரையோ எனவெண்ணி மனங் கலங்கற்க. காலமும் இடமும் சால நடப்பின் கவிதையு மாகும், புவிகையும் ஆகும். கவிதை இதுவாயின் செவி செய்து கேட்க; இற்றை நாளினும் முற்ற இஃதுண்டோ, பண்டை நாளினும் உண்டோ பகருவீர்? மற்றுமதன்னை யும் தெற்றெனயானும் உற்றிடத்துலாவ, இருண்டு வரும் இராப்போது திரண்டு வருமுன்னே உருண்டுளத்தில் வந்த மருண்ட வெண்ணம் இதுவே.

ஆல்னியூரில் இன்று மேல் நிகழும் செய்தி ஏதுமில்லை நலமும் தீதுமில்லை; எனினும், அப்பாவி தோழர் பீஸ் இப் போது நீங்கள் தந்த தப்பான செய்தியினால் மன அமைதி தனையிழந்து அலை உடல் போல் குலைகின்றார்.

திருவாளர் பேஜூம் அவர் பெரு வாழ்க்கைத் துணைவி யாரும் நச்சரவம் தீண்டினவர் போல் சச்சரவு செய் கின்றார்கள். கட்டோடு அவர்களை விட்டோடிச் சென் றோம். திருவாளர் ஸ்காட்டு ஒரு நண்பரின் வீட்டு முக வரியைக் கேட்டு விரைந்து சென்றார். திருவாட்டி ஜோன்ஸ் பெருமாட்டி தம் தங்கையுடன் ஒருவாட்டி வந்து தங்கி

---

* இக் கடித முழுதும் ஆங்கிலத்தில் ஆங்கில மரபுப்படி ஈற் றெதுகையிலமைந்துள்ளது. நேர் மொழிபெயர்ப்பில் இத்தன்மை தமிழில் வராது. எனவே தழுவித் தமிழ் மரபுப்படி முதலெதுகை யில் தரப்படுகிறது.

இன்னும் மீட்டுவருவேனென்று அதிர்வேட்டுப் போட்டுச் சென்ருள். எனவே இனிமேலே இங்கிருப்பதாலே செலவு பெருகுமென்னும் நிலைமையறிந்து விரைந்து அகல்கிரும். இவ்விடம் விட்டுத் தளிர்களெலாம் வாடி விழும் குளிர் பருவம் போகும்வரை ஸ்பின்னியிலே சென்று நாம் மன்னி இனி வாழ்வோம்.

பாட்டியற்றுவதில் எனது நோட்டமெல்லாம் அறத்தின் நாட்டமே: பிற திறத்தின் வேட்டமோ அன்றிப் புகழ் நாட்டமோ கிடையாது. இது நலங்கண்டு நமது நன்மதிப்புரையாளர் அதனை வரவேற்பர். என் அவா நிறைவேற்றுவர் என உளந்தேற்றுவன்..............

இங்ஙனம் பாட்டியல் காட்டி வரைந்தும்
செம்மனத்தன்பு இம்மியும் தளரா
வி. கூ.

34. ஊர்ப்புற உண்டி

[இதுவுமது]

ஜூலை 22, 1781,

என் பாட்டியல் முடங்கலில் குறித்த ஸ்பின்னிப் பயணத்தை நேற்று முடித்தோம். கால நிலையையும் எங்கள் திட்டத்துட்படுத்தி எங்கள் விருப்பப்படி அதனைத் தேர்ந்தெடுத்திருக்கக் கூடுமாணுல்கூட இதனினும் நல்லதொரு கால வாய்ப்பைப் பெற்றிருக்க முடியாது. நாங்கள் வேரடிகளின் சூழலிலேயே உணவு உண்டோம். நாங்கள் கொண்டு சென்ற மிடா இவ்வகைக்கு மிக மிகப் பொருத்தமானது. அது எங்கள் தளவாடப் பொருள்களை யாவற்றையும் அடக்கிக் கொண்டதுடன், மேலே ஒரு பலகையிட்டபின் அவ்விடத்தில் எம் உணவு

மேடைப்பலகையாகவும் பயன்பட்டது. நாங்கள் ஒரு மணிக்குப் புறப்பட்டு மணிஎட்டாவதற்குள் திரும்பி விட்டோம். எங்கள் கூட்டுறவு சிறிது மனச்சோர்வு தரு முன் நாங்கள் பிரிந்துவிட்டதால் மிகவும் இனியதாகவே இருந்தது. இத்தகைய தறுவாய்களில் இந் நன்னிலை ஏற்படுவது அரிது. எங்களிடையே ஹானு உட்பட எழுவர் இருந்தனர். இளமை நலத்துடன் ஓடியாடிய ஹானு எவ்வளவு மகிழ்ச்சி பெற்றிருப்பாளோ அவ்வளவு எங்களிடை முதுமைமிக்கவரும் பெற்றிருப்பார். அவளும் நேற்றிரவு பிறந்த அவள் தங்கையின் வரவால் எவ்வளவு மகிழ்ச்சி யடைந்திருக்கிருளோ அவ்வளவு இன்றைய ஊர்ப்புற உண்டியினுலும் அடைந்திருப்பாள் என்பது உறுதி........

தங்கள் தேங்காய்ப் பருப்புக்கும் சறுக்கு வண்டிக் கும் மிகவும் நன்றி. திருமதி அன்வின் உங்கள் இருவருக் கும் தம் அன்பைத் தெரிவித்துக் கொள்கிருர். இளவேனில் கூடிவருவதனுல்

அவளும் அவள் பண்பாடும்
கம்பளமில்லாமே கூடும்

தங்கள், அத்துடன், என் அரிய நண்பரீர்,
திருமதி. நியூட்டனின் ஊழியன்
வி. கூ.

35. காலத்தின் கோலம்

[திருவாட்டி. நியூட்டன் அவர்கட்கு]

ஆகஸ்டு, 1781

அன்புக்குரிய அம்மையீர்,

......என் குடும்ப வரலாற்றை மணிச் சுருக்கமாக்கியறி வித்தமைக்கு மிகவும் நன்றி. இந்த உலகின் மற்ற எல்லாச்

செய்திகளிலும் வருந்துவதற்குரியனவும் நகையாடுவதற்குரியனவும் சரி பாதிக்குச் சரிபாதியாயிருப்பது போலவே, இதிலும் கவற்சிக்குரியனவும் மகிழ்ச்சிக்குரியனவும் சரியாகக் கலந்து காணப்பெறுகின்றன. தாங்கள் எடுத்துக் காட்டிய என் பெரியப்பனார் வகையிலும் இவ்விரண்டுபடும் திறனைக் காணலாம். எண்பதாவது ஆண்டில் தான் அவர் உடல் சற்றுத் தளர்ந்துள்ளது. ஆனால் அவர் இன்றும் தம் வெள்ளைக் குல்லாவையும் மஞ்சள் நாடாவையும் மாற்றக் கூடாதென்று பிடிவாதம் செய்கிறார். நாடாவும் வெள்ளையாயிருந்து விட்டால் அதை முட்டைக்கோசென்று நினைத்து யாராவது கூடையிலிட்டுக் கொண்டு போயிருப்பார்கள்! அவர் வயதுக்குப் பிடிமுரண்டு ஏற்றதன்று.

உலகமுள்ளளவும் காலத்தின் இக்கோபமானது மனிதரை மூக்காஞ்சரடு பிடித்து இழுத்துக் கொண்டு தான் செல்லும். தன் அடியவர்களுக்குக் காலம் இதை விடத் தான் என்ன செய்து விடமுடியும்? அது பொருள்களின் தன்மையினை மாற்ற முடியாது: அதன் மீது தன் குறியீட்டு வரைகளைப் பொறித்துச் சிறிது உருமாற்றம் மட்டுமே செய்யமுடியும். நம் குல்லாய் வெண்மையாயிருந்து கறுப்பாகலாம். உயரமாயிருந்து தாழ்ந்ததாகலாம். கைக் கெடிகாரம் ஒன்று போடலாம், இரண்டு மாட்டிக் கொள்ளலாம். இவையெல்லாம் ஒரு பொருட்டாகமாட்டா. வெளித் தோற்றத்தில் ஒரு மாறுபாடு போல் தோற்றம்; அவ்வளவுதான்! ஆனால் இம்மாறுபாட்டுக்குக் காரணமான மனிதர் தற்பெருமையும் சிறுமையும் அறியாமையும் எப்போதும் ஒன்றே போலவே உள்ளன. ஒரு காலத்து நடையுடை தோற்றம் மற்றொரு காலத்தில் மாறுபடுவது அவை பொருத்தமானவை என்பதனாலோ உலகம் அறிவு

விளக்கம் பெற்றுவிட்டது என்பதனாலோ அல்ல. ஓயாத மாற்றத்தில் ஒரோரு சமயம் நல்லது ஏற்படவுங் கூடும். ஆனால் அதே போது தீமையின் முறையும் வரலாமாதலால் இக்காலப் பழக்க வழக்கங்களின் கேடுகள் யாவும் அறியாமையால் வந்தனவென்றும் நாம் கொள்வதற்கில்லை. இன்னும் சில ஆண்டுகளுக்குள், ஒருவேளை அடுத்த ஆண்டிலேயே இக்கால நன்மகன் தனது பண்பாட்டின் கொடிபோல் கையில் விரித்து வைத்திருக்கும் குடையைச் சுருக்கி வைத்துக்கொள்ளவும் நேரலாம்; அல்லது அது தன்னைவிடத் தன் உடன் பிறந்தானுக்கு மிகவும் பொருத்தமானதென்று அதை அப்படியே அவனுக்குக் கொடுத்து விடவும் கூடும். இதற்கு மாற்றாக அவன் ஒரு வளைத்த தடியே பொருத்தமான தென்று அத்தகைய ஒன்றைக் கொண்டுவிடனும் கூடும். இவ்வண்ணம் செய்வதாக வைத்துக்கொண்டால், அவன் இப்போதிருப்பதைவிட அறிவு சிறந்தவனாய் விடுவானா? ஒருபோதுமில்லை. மாறுபாட்டின் நாட்டமூலம் அவன் புதியதொரு நற்பழக்கத்தைக் கொள்ளலாம். ஆனால் அதனை அவன் மேற் கொள்வது அதனை விரும்பும் நற்பண்புடைமையால் அல்ல. அவன் மனக்கோள் முழுவதும் எப்போதும் ஒன்றேதான்—ஒரு விளையாட்டுப் பொருள் சலித்துவிட்டபின் மற்றொன்றை மேற்கொள்வது என்பதே.

அம்மையீர், தங்கள் அன்புக்குரிய

வி. கூ.

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS.